# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 64 — 1973 ජූනි 14 වැනි බ්‍රහස්පතින්දා — 1973.06.14

64 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு யூன் மாதம் 14 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் இடப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் — வெற்றிடம் .. .. .. | 555 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 577 |


**கவனிக்க.**—பெண்களையும் இளம் ஆட்களையும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தம்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## பதவிகள் — வெற்றிடம்

### "இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

*1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டாலொழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு; நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.*

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.*

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் அ. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

---

### முக்கிய அறிவித்தல்

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ)விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

**எல். டபிள்யூ. பி. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
***1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.***

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன்தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 03 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடன் அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்கள் அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்றும் பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(ii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு. அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையன கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

## அரசாங்க கணக்காளர் சேவையில் IV ஆம் வகுப்புக் கணக்காளர் பதவிகள்

அரசாங்க கணக்காளர் சேவையில் IV ஆம் வகுப்புக் கணக்காளர் பதவிகளுக்கு அரசாங்க கணக்காளர் சேவையின் பிரமாணக் குறிப்பின் பத்தி 4A இன் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே இணைக்கப்பட்டுள்ள அமைப்பினதான படிவங்களிலான விண்ணப்பங்கள், இணைந்து சேவைகள் பணிப்பாளர், அரசாங்க நிருவாகத் திணைக்களம், ரொறிங்ரன் சதுக்கம், கொழும்பு 7 என்ற முகவரிக்கு 1973 யூலை 07 ஆம் தேதியில் அல்லது அதற்கு முன்னர் அவருக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும்.

குறிப்பு.—விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய விண்ணப்பப் படிவம் தொடர்பான ஒரு கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச் சாட்டு எதுவும் கவனிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்களை அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் தாமதிப்பவர்கள், அதனால் வரும் இடருக்குந் தாமே பொறுப்பாவர்.

2. பணிக்கமர்த்தும் நியதிகளும், சேவை நிபந்தனைகளும்

(i) இப்பதவிகள் நிரந்தரமானவை ஆனால் ஓய்வூதியமற்றவை. நியமனத் தேதியிலிருந்து அரசாங்க சேவை சகாய நிதிக்கு உங்களால் உதவுதொகை செலுத்தப்படல் வேண்டும் ;

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், மூன்றாண்டுகளுக்குத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர். தெரிவு செய்யப்படும் அபேட்சகரொருவர், நிரந்தரமான, ஓய்வூதியத்திற்குரிமையுடைய நியமனமொன்றை 1972, ஜனவரி 01 ஆந் தேதிக்கு முன்னர் அரசாங்கத்தின் கீழ் வகிப்பவராகவிருந்தால் அவர் முதற்கண், குறிப்பிட்டவொரு காலத்திற்குப் பதில் கடமையாற்றுமாறு நியமிக்கப்படுவார் ;

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், அரசகருமமொழிக் கோள்கை நோக்கத்திற்காகப் "புதிதாகச் சேர்ந்த" வர்களானால், தாங்கள் 1956 ம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்காக இப்பொழுதுள்ள ஏதேனும் சட்டங்களுக்கும், விதிகளுக்கும் அல்லது வருங் காலத்திற் புகுத்தப்படக் கூடியனவான ஏதேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கியொழுகுவாராகவென்னும் நிபந்தனைகளுக்கு உட்படுதல் வேண்டும் ;

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் "புதிதாகச் சேர்ந்தவர்களானால்" தகுதிகூர் காலத்திற் சிங்களத்தில் தேர்ச்சி பெறுமாறு வேண்டப்படுவார் ;

(v) தகுதிகூர் கால முடிவில் நியமனத்தில் உறுதிப்படுத்தலானது, பிறவற்றுடன் விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடைவதையும் பொறுத்துள்ளது. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், விதிக்கப்பட்ட காலத்திற்குள் இச்சோதனைகளில் சித்தியெய்தத் தவறினால், சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவர்.

3. சம்பளமும் படிகளும்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பளம் ஆண்டொன்றுக்கு ரூபா 6,720—ரூபா 360 இல் 12—ரூபா 11,040 ஆகும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஆண்டொன்றுக்கு 9,960 ரூபா திரட்டிய சம்பள நிலையில் அமர்த்தப்படுவர். அவர்கள் I ஆம் வகுப்பில் மூன்றாண்டுச் சேவையினை முடித்ததும் III ஆம் வகுப்புக்குப் பதவியேற்றஞ் செய்யப்படுதற்குப் பரிசீலிக்கப்படுவதற்குத் தகவுடையவராவர். பிற சேவை நியதிகளும் நிபந்தனைகளும் அவ்வப்பொழுது திருத்தப்பட்டவாறான 1971 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆம் தேதிய இலங்கை அரசாங்கச் செய்திமடலில் விதிக்கப்பட்டவாறாகும்.

4. தேவையான தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும தகைமைகளையுடையவரென்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) மிகச் சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராயிருத்தல் வேண்டும் ;

(ஆ) பரம்பரையினால் அல்லது பதிவினால் இலங்கையராயிருத்தல் வேண்டும் ;

(இ) 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் தேதியன்று 42 வயதிற்கு மேற்படாதவராயிருத்தல் வேண்டும் ; (இவ்வயதெல்லை, எலவே அரசாங்க சேவையிலுள்ள ஆட்களுக்கு ஏற்புடையதாகாது) ;

(ஈ) இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் ஓர் உறுப்பினராக இருத்தல் வேண்டும், அல்லது ;

(உ) ஆக்கச் செலவு, முகாமைக் கணக்காளர் நிறுவகத்தின் (ஐ. சி. எம். ஏ.), (யூ. கே.) ஓர் உறுப்பினராக இருத்தல் வேண்டும்;

(ஊ) (ஐக்கிய இராச்சியப்) பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் ஓர் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது யாவற்றையும் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;

(**கவனிக்குக:** சமய தீட்சைச் சான்றிதழ்கள் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுக்காய ஒழுங்கு விதிச் சட்டக் கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்ட அல்லது மிகவுயர்ந்த சான்றிதழ் ;

(இ) இரண்டு நற்குணச்சான்றிதழ்கள் ; இவற்றுள் ஒன்று அறிவாய்வுப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர், அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாகவிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற் தகைமைச் சான்றிதழ்கள், அத்துடன்/அல்லது தொழினுட்பத் தகைமைச் சான்றிதழ்கள் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிகவுயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.—(i)** சாதனங்களையோ சாதனங்களின் பிரதிகளையோ விண்ணப்படிவத்துடன் இணைத்தலாகாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்பொழுது, அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வத் திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தின் பிரதியொன்று விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர், அரசாங்க நிருவாகத் திணைக்களம், ரொறிங்ரன் சதுக்கம், கொழும்பு 7 என்ற முகவரிக்கு நேரடியாக அனுப்பப்படல் வேண்டும்.

7. நியமிக்கப்படும் அபேட்சகர்கள் மூன்றாண்டுக் காலத் தகுதிகாலத்தைப் பூர்த்தி செய்தவுடன் அவர்கள் தங்கள் பதவிகளில் உறுதிப்படுத்தப்பட முன்னர் ஒரு சோதனையில் பின்வரும் பாடங்களில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர் :—

(i) நிதி ஒழுங்கு விதிகள் ;

(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விதிகள், இலங்கை அரசாங்க தாபனச் சட்டக் கோவை.

8. இச் செய்திமடலின் பகுதி I, பிரிவு II இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்குச் செய்யப்படும் நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

9. விண்ணப்ப முடிவுத் தேதியிலிருந்து மூன்று கிழமைகளுக்குள் விண்ணப்பம் கிடைத்தமை பற்றி விண்ணப்பக்காரர்கட்கு அறிவிக்கப்படும். விண்ணப்பத்தைப் பெற்றமை பற்றி அறிவித்தல் கிடைக்காவிட்டால் அதுபற்றி அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உண்ணாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர், கொழும்பு 7 என்னும் முகவரிக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

பி. எச். சிறிவர்த்தனா,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரும் அரசாங்க நிருவாக பதில் பணிப்பாளர் அதிபதியும்.

அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சு,
ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு யூன் மீ

விண்ணப்ப மாதிரிப் படிவம்

**அரசாங்க கணக்காளர் சேவையிலுள்ள IV ஆம் வகுப்புக் கணக்காளர் பதவிகள்**

இல :

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. முழுப்பெயர் : ————.
(உறுப்பெழுத்தில்)

2. அஞ்சல் முகவரி : ————.
(அஞ்சல் முகவரி மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கப்படுதல் வேண்டும்)



3. பிறந்த தேதி :—
வருடம் : ————, மாதம் : ————, தேதி : ————.

4. உள்ளூர் விண்ணப்பகாரர்களுக்கு முடிவடையுந் தேதியன்றுள்ள சரியான வயது :—
வருடம் : ————, மாதம் : ————, நாள் : ————.

5. நீர் இலங்கைப் பிரசையா ? : ————.
(வம்சாவழி அல்லது வதிவுப் பிரசையா என்று குறிப்பிடுக)
(குறிப்பு இல. (1) பார்க்குக)

6. பிறந்த இடம்—(குறிப்பு இல : (2) பார்க்குக)—

(அ) விண்ணப்பதாரர் :————.

(ஆ) தகப்பன் : ————.

(இ) தகப்பன்வழிப் பாட்டன் : ————.

(ஈ) தகப்பன் வழிப்பூட்டன் : ————.

7. (அ) ஆணா, பெண்ணா ? : ————.

(ஆ) விவாகமானவர், தனிப்பட்டவர், விதவை, தாரமிழந்தவர் : ————.

8. (1) சிங்களம், (2) தமிழ், (3) ஆங்கிலம் சித்தி அடைந்த ஆகக்கூடிய பரீட்சை : ————.

9. 12 ஆம் வயதிலிருந்து படித்த பாடசாலைகள், கல்லூரிகள் வேறுங் கல்வித்தாபனங்கள் :—

| பொதுக் கல்வி | | உத்தியோகக் கல்வி | |
|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொட்டு முடிய | கல்வித் தாபனம் | தொட்டு முடிய |
| (1) | | | |
| (2) | | | |
| (3) | | | |
| (4) | | | |
| (5) | | | |

10. (அ) நீர் கடன் தொல்லைகள் இல்லாதவரா ? : ————.
இருக்கும் பட்சத்தில் கடன் பொறுப்புகளின் அளவு என்ன : ————.

(ஆ) சட்ட நீதிமன்றங்களில் ஏதாவது குற்றப்பாதகத்திற்குக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறீரா ? அப்படியானால் வழக்கிலக்கத்தை எடுத்துக்காட்டித் தேதிகளோடு முழு விபரங்களையும் குறிப்பிடுக : ————.

11. பாடசாலைக் கல்வி, உத்தியோகக் கல்வி, நுண்தொழிற் கல்வித் தகைமைகள் : ————.

(பல்கலைக்கழகத்துச் சகல பட்டங்கள், திறமைகள் உத்தியோகக் கல்வி/அல்லது நுண்தொழிற் கல்வித் தகைமைகள் முதலிய வற்றின் விபரங்களைத் தேதி சித்தித் தரம் இருந்தால் அவை, எடுத்த பாடங்கள் கல்வித் தாபனப் பெயர்கள் இவற்றுடன் தருக)

12. இப்போதைய தொழிலும், முன்னர் ஏதேனும் பதவியில் இருந்தால் அப்பதவிகளும் :————.

(பதவி ஏற்றுக் கொண்ட தேதியும் விட்டு நீங்கிய தேதியும் கடைசியாகப் பெற்ற ஆண்டுச் சம்பளமும் குறிப்பிடப்பட வேண்டும்)

**முக்கியம்.**—அரசாங்க உத்தியோகத்திலிருந்து நீங்கிய காரணம் கீழேயுள்ள 13 ஆம் நிரப்பு பிரிவிற் குறிப்பிடப்படல் வேண்டும்.

| | பதவி | தொட்டு முடிய | ஆண்டுச் சம்பளம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |

13. மேலும் வேறு விபரங்கள் ————.

14. தங்களைப் பற்றிய விபரங்களைப் பெறக்கூடிய தங்களுக்கு அறிந்த இருவரின் பெயர்களையும் முகவரிகளையும் தருக : —

(i) ————.

(ii) ————.

15. இந்த விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, சரியற்றவையென்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனாக்கப்படுவேனென்றும், நியமனம் பெற்றபின் சரியற்றவை என்று கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவியால் நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி : ————.

குறிப்புகள்.—(1) இலங்கைப் பதிவுப் பிரசையானால் உமக்கு வழங்கப் பட்ட பிரசைப்பத்திரத் தொடர்பு இலக்கமும் தேதியும் குறிப்பிடுக.

(2) விண்ணப்பகாரர் இலங்கையிற் பிறந்தவராயின் (அ) அல்லது (இ) (ஈ) இரண்டும் (அ) உடன் சேர்த்து நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பக்காரர் இலங்கையிற் பிறக்காதவராயின் (ஆ) உம் (இ) உம் அல்லது (இ) உம் (ஈ) உம் (அ) விட்டு நிரப்பப்படுதல் வேண்டும்.

அபேட்சகர் அரசாங்க சேவையில் இருப்பவரெனில் அப்பகுதித் தலைவரின் அறிக்கை.

————,
திணைக்கள/அமைச்சுத் தலைவரின்
கையொப்பம்.

6-537—14.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 64

---

### பொதுத்திறைசேரி

உதவிப் பணிப்பாளர் பதவி (கூட்டுத்தாபனப் பகுதி)

பொதுத்திறைசேரியின் கூட்டுத்தாபனப் பகுதியில் உதவிப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவழைக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் எழுதப்பெற்று செயலாளர், நிதி அமைச்சு (மத்திய கிளை), அ. பெ. இலக்கம் 500, கொழும்பு 1 என்ற முகவரியுடன் 1973, யூலை மாதம் 05 ஆந் தேதிக்குப் பிந்தாமல் அவர் பெறக்கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும். உறையின் வலதுபக்க மேல் மூலையில்" உதவிப் பணிப்பாளர், கூட்டுத்தாபனப் பகுதி" எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—விண்ணப்பப்படிவம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டதெனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

2. சம்பளமும் படிகளும்.—(அ) நிரந்தர, உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற அடிப்படையில் ஆண்டுக்கு 11,040 ரூபா—11 × 480—16,320 ரூபாவும் மணமானவர் படியும்; அல்லது

(ஆ) தற்காலிகச் சேவைமாற்றம் பெற்ற கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களுக்குக் கூட்டுத்தாபனச் சம்பளம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் அவரின் தகைமைக்கும் அனுபவத்துக்குமேற்ப சம்பளத்திட்டத்தில் ஏற்ற நிலையில் வைக்கப்படுவர்.

3. தகைமைகள்.—அபேட்சகர் ஒவ்வொருவரும்—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையவரென்பதற்கும்;

(ஆ) 1973, யூலை மாதம் 05 ஆந் தேதியில் 23 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் உள்ளவரென்பதற்கும் திருத்திகரமான சான்றளித்தல் வேண்டும். (ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மேலெல்லை வயது பொருந்தாது).

கல்வித் தகைமைகள்—

(1) இலங்கை/இங்கிலாந்து/வேல்சுத் தத்துவம் பெற்ற கணக்காளர் கழகத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தி; அல்லது

(2) இங்கிலாந்துச் செலவு, வேலைக் கணக்காளர் கழகத்து உறுப்பினர்.

பின்வரும் துறைகள் எவற்றிலும் அரசாங்கத் திணைக்களம், பெரிய கைத்தொழில் அல்லது வர்த்தக முயற்சியொன்றில் நிருவாகக் கட்டத்தில் தகைமைக்குப் பின்னர் அனுபவம் பெற்றிருத்தல் நன்மை பயப்பதாகும் :

(1) நிதி நிருவாகம், பரிசீலனையும் முகாமையும்;

(2) கணக்கிடல், செலவுக் கணக்கு, முகாமை முறைகள் தயாரித்தல்.

(3) திட்டப் பரிசீலனையும் மதிப்பிடலும்.

4. பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்கள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கப்படும்போது அவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது);

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்;

(இ) உயர் தொழிற்றகைமையும் அத்துடன்/அல்லது தொழினுட்பத் தகைமையும் பற்றிய சான்றிதழ்;

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தலாகாது;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

5. அரசாங்கச் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும்.

6. விண்ணப்பப்படிவங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், நிதி அமைச்சு என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி, இவ்வமைச்சிலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இச் செய்திமடலின் I ஆம் பாகம் 2 ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள; அவற்றைப் பார்க்க.

சீ. ஏ. கூறே,
செயலாளர்,
நிதியமைச்சு.

நிதி அமைச்சு.
அ. பெ. இலக்கம் 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு—1.
1973, யூன் மாதம் 01 ஆந் தேதி.

### விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பிக்கும் பதவி :————.

2. முழுப் பெயர் (பெரிய எழுத்தில்) :————.

3. அஞ்சல் முகவரி :————.
(முகவரியில் ஏற்படும் மாற்றமெதுவும் உடனடியாக அறிவிக்கப்படல் வேண்டும்)

4. பிறந்த தேதி :————.
———— ஆண்டு; ———— மாதம்; ———— — நாள்.

5. விண்ணப்ப முடிவு தேதியில் திட்டமான வயது—
———— ஆண்டுகள்; ———— மாதங்கள்; ———— நாட்கள்.

6. இலங்கைக் குடியா என்பது? மரபுவழியாகவா பதிவு வழியாகவா என்பதைக் கூறுக. ( (1) ஆம் இலக்கக் குறிப்பைப் பார்க்க) :————.

7. பின்வருவோர் பிறந்த இடம் ( (2) ஆம் இலக்க குறிப்பைப் பார்க்க)

(அ) விண்ணப்பகாரர் :————.

(ஆ) விண்ணப்பகாரர் தந்தை :————.

(இ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பாட்டன் :————

(ஈ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன் :————.

8. (அ) பால் :————.

(ஆ) மணமானவரா, தனியானவரா, வாழ்விழந்தவரா :

9. (1) சிங்களம், (2) தமிழ், (3) ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி பெற்ற உயர்ந்த பரீட்சைகள் :————.

(1)

(2)

(3)

10. பல்கலைக்கழக, உயர்தொழில், தொழினுட்ப தகைமைகள் : ————.

(பெற்றுள்ள பட்டங்கள், சிறப்புச் சித்தி, உயர்தொழில் அத்துடன்/அல்லது தொழினுட்ப தகைமைகள் யாவற்றையும் அவற்றைப் பெற்றதேதி, வகுப்பு (எதுவுமுண்டானால்), எடுத்த பாடங்கள், கழகத்தின் பெயர் ஆகியவற்றுடன் விரிவாகக் கூறுக.)

11. இப்பொழுது வகிக்கும் பதவியும் முந்திய நியமனங்கள் எதுவுமுண்டானால் அவையும் வேலையிலமர்த்தப்பட்ட தேதி, விலகிய தேதி, கடைசியாகப் பெற்ற ஆண்டுச் சம்பளம் யாவும் குறிப்பிடப்படல் வேண்டும் :————.

முக்கிய குறிப்பு—அரசாங்கத்தின் கீழ் தொழிலிருந்து விலகிய காரணம் 13 ஆம் கூட்டில் கூறப்படல் வேண்டும்.

| | பதவி | இருந்து | வரை | ஆண்டுச்சம்பளம் |
|---|---|---|---|---|
| (1) | | | | |
| (2) | | | | |
| (3) | | | | |
| (4) | | | | |
| (5) | | | | |
| (6) | | | | |
| (7) | | | | |
| (8) | | | | |

12. விசேட தகைமைகள்.—அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள விசேட தகைமைகளை அத்துடன்/அல்லது அனுபவத்தை பெற்றிருக்கிறீரா? அவ்வாறாயின் அவற்றின் முழு விவரங்களையும் தேதிகளுடன் கூறுக. செய்திமடல் அறிவித்தலில் விசேட தேவைகள் எவையும் குறிப்பிடப்பட்டிருந்தால் அவற்றைப் பார்க்க :————.

13. பிற விவரங்கள் எவையேனும் :————.

14. இந்த விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இதனகத்துள்ள விவரங்களுள் எவையேனும் உண்மையற்றவை அல்லது சரியற்றவையெனக் காணப்பட்டால், தேர்வுக்கு முன்னர் தகைமையற்றவர் ஆவதற்கு ஆளாவேன் என்பதையும் நியமனத்திற்குப் பின்னர் சரியின்மை கண்டுபிடிக்கப்பட்டால் இழப்பீடு எதுவுமின்றித் தள்ளப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரர் கையொப்பம்.

தேதி :————.

6-489—14.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 64.

---

### தொழிற்றிணைக்களம்

#### படவரைவாளர் தொழில் பயில்வோர் பதவி

தொழிற்றிணைக்களத்தில், படவரைவாளர் தொழில் பயில்வோர் பதவி ஒன்றினுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பஞ் செய்வோர், இவ் விளம்பரத்தினடியிற் குறித்துக் காட்டப் பட்டுள்ள வகையில் மாதிரிப் படிவத்தினை அமைத்தெழுதி, 1973 ம் ஆண்டு யூலை மாதம் 7 ந் தேதியன்றோ அதற்கு முன்னதாவோ “தொழில் ஆணையாளர், தொழிற் செயலகம், கொழும்பு-5” என்னும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

(2) சம்பள அளவைத் திட்டம்.—ஆண்டொன்றுக்கு ரூ. 3,000—90×3—ரூ. 3,270 (திரட்டியது) (1.10.69 க்கு முன்னதாக இப் பதவிக்கான சம்பள அளவுத் திட்டம் ஆண்டொன்றுக்கு 960—72×2—1,104 ஆக இருந்தது.)

குறிப்பு.—பின்னதாக வரும் 4 (iii) (அ) ம் பந்தியிலும், 4 (iii) (ஆ) ம் பந்தியிலும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் நியமனம் பெறுவோர் ஆண்டொன்றுக்கு மேற்காட்டிய சம்பள அளவுத் திட்டத்தில் முறையே ரூ. 3,090 ரூ. 3,180 தொடக்கச் சம்பளமாகப் பெறுவதற்கு உரிமையுடையவராவர்.

(3) நியமன நியதிகள்.—(i) இப் பதவிகள் தற்காலிகமானவை. அரசாங்க சேவைச் சேமநிதிக்கு உதவுதொகை வழங்கப்படுதல் வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர், பற்றுறுதியுடனும் விடா முயற்சியுடனும் பயிற்சி நெறியிற் சேர்ந்து பயின்று II ம் வகுப்புப் படவரைவாளராக நியமனம் பெறத்தக்க வகையில் முயல்வதாகவும், பயிற்சி முடிவு பெற்றபின் திணைக்களத்தார் வேண்டிக்கொண்டால், 5 ஆண்டுக்குக் குறையாத காலத்துக்கு II ம் வகுப்புப் படவரைவாளராகத் திணைக்களத்திற் பணியாற்றுவதாகவும் ஓர் ஒப்பந்தம் திணைக்களத்துடன் செய்து கொள்ளுமாறு வேண்டப்பெறுவர். இந்த நியதிக்கு அமைந்தொழுகச் செய்வதற்காக, பயிற்சியாளரும் அவர்களது பெற்றோரும் அல்லது பாதுகாவலரும் பிணைகாரர் இருவருடன் ரூ. 7,000 பெறுமதியான தொகைக்கு ஒரு பிணை முடித்துக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளப்பெறுவர்.

(4) கல்வித் தகைமையும் பிற தகைமைகளும்.—(i) விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும்,

(அ) சிறந்த குணநலமும் உடலுறுதியும் உடையவர் என்பதற்கும்,

(ஆ) 16 வயதுக்குக் குறைந்தவரல்லர் என்பதற்கும் 22 வயதுக்கு மேற்பட்டவரல்லர் என்பதற்கும்,

மனநிறைவு தரும் சான்று காட்டுதல் வேண்டும்.

(ii) (அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண)த் தேர்வில், சிங்கள/தமிழ் மொழி, கணிதம், பௌதிகவியல் அல்லது பிரயோக கணிதம் ஆகியவை உட்பட ஆறு பாடங்களிற் சித்திபெற்றிருத்தல் வேண்டும்; அல்லது

(ஆ) சிங்கள/தமிழ் மொழி, கணிதம், பௌதிகவியல் அல்லது பிரயோக கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட, சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரத் தேர்விற் சித்திபெற்றிருத்தல் வேண்டும்; அல்லது

தூய கணிதம், பௌதிகவியல் அல்லது பிரயோக கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட, உயர்தரத் தேர்வு ஒன்றினிற் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

பின்வரும் தகைமைகளுள்ளும் ஒன்றினை உடையவராயிருத்தல் வேண்டும் :—

(iii) (அ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியிலே, படவரைவாளர் முழுநேரப் பகல்வேளைப் பயிற்சிநெறி வகுப்பில் ஓராண்டுக் காலம் படித்துச் சித்திபெற்றிருத்தல் வேண்டும்; அல்லது

(ஆ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியிலே, கனிட்ட தொழில் நுட்ப அலுவலாளர் (ஈராண்டு) பயிற்சிநெறி வகுப்பிற் படித்துச் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

(5) சேவை நியதிகள்.—(அ) பொது நியதிகள்—இச் செய்திமடலில் I ம் பாகம் (II அ) ஆம் பிரிவின் தொடக்கத்திற் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அரசாங்க சேவையிலுள்ள பதவி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நியதிகளை நோக்குமாறு வேண்டுகின்றோம்.

(ஆ) பிற நியதிகள்.—(i) விண்ணப்பகாரருள்ளே தெரிவு செய்யப்படுவோருள்ளே 4 (iii) (அ) ம் பந்திக்கமைந்த தகைமை வாய்ந்தோர், இலங்கை அரசாங்கப் புகையிரதத் திணைக்களத்திலும் கொழும்புத் துறைமுக ஆணைக் கழகத்திலுமோ அல்லது பிற அரசாங்கத் தாபனத்திலோ இரண்டு ஆண்டுகளுக்குத் தொழில் பயில்வோராகச் செய்முறைப் பயிற்சி பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். 4 (iii) (ஆ) ம் பந்திக்கமைந்த தகைமை வாய்ந்தோர் ஓர் ஆண்டுக்குச் செய்முறைப் பயிற்சி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(ii) பயிற்சிக் கால இறுதி வேளையிலே, இத் திணைக்களத்தினால் நடாத்தப்பெறும் தேர்வு ஒன்றிலே சித்திபெறுதல் வேண்டும். விதிக்கப்பட்ட தேர்விலே சித்திபெறத் தவறுவோர் தொழில் வசதி பெருது நீக்கப்படுவர். ஆயின், தொழில் ஆணையாளர் தற்றுணிவின்படி அவர்கள் தொழில் வசதி ஓராண்டுக் காலத்துக்கு நீடிக்கப்பட்டு, மீண்டும் ஒரு முறை தேர்வுக்குத் தோற்றுவதற்கு அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படலாம். இரண்டாவது முறையும் அவர்கள் சித்திபெறத் தவறினால், அவர்கள் சேவையிலிருந்து நீக்கப்படுவர்.

(iii) பயிற்சிக் காலத்திலே, பயிற்சியிலே தகுந்த முன்னேற்றம் காட்டாவிடினும், பிற காரணங்களால் மேலும் பயிற்சியளிப்பது திணைக்களத்தின் நலனுக்கு உகந்ததன்று எனக் கருதப்படினும், தொழில் பயில்வோர் சேவையிலிருந்து முன்னறிவித்தலின்றி நீக்கப்படுவர்.

(iv) செய்முறைப் பயிற்சியினைச் செவ்வனே முடித்துத் திணைக்களத்தேர்விலும் சித்தியடைந்தபின், படவரைவாளர் தொழில் பயில்வோர், பதவி வெற்றிடங்கள் இருப்பின், ஓர் ஆண்டுத் தகுதி காண் நிலையில் ஆண்டொன்றுக்கு ரூ. 3,432—21 × 144—6,456 திரட்டிய சம்பள அளவைத் திட்டத்தில் II ம் வகுப்புப் படவரைவாளராக நியமனம் பெறத் தகுதியுடையவராவர்.

(6) விண்ணப்பகாரர், தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் படிகளை அனுப்பி வைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;

(ஆ) கல்வி, தொழில்நுட்பத் தகைமைச் சான்றிதழ்கள் ;

(இ) அண்மையிலே பெற்றுக் கொண்ட நல்லொழுக்கச் சான்றிதழ்கள் இரண்டு. (ஏலவே அரசாங்க சேவையில் உள்ளோருக்கு இது இயைபுடைத்தாகாது.)

(7) அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவரவர் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். விதிக்கப்பட்ட தேதிக்குப் பிந்திக் கிடைக்கப்பெறும் விண்ணப்பம் எதுவேனும், விதிக்கப்பட்ட தேதிக்கு முன்னதாக உரிய திணைக்களத் தலைவராற் பெற்றுக்கொள்ளப்பட்டு, தாமதமானமைக்குப் போதிய காரணங்காட்டி அதனை ஏற்றுக்கொள்ளுமாறு திணைக்களத் தலைவரால் விதந்துரைக்கப்பட்டாலன்றி, ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(8) விண்ணப்பங்களோ விண்ணப்பங்கள் தொடர்பான பிற கடிதங்களோ, "தொழில் ஆணையாளர், தொழிற்றிணைக்களம், கொழும்பு" என்ற முகவரிக்கு அனுப்பப்படுவதன்றி, இத் திணைக்களத்திலிருக்கும் எவ்வலுவலாளர் பெயர் குறித்தும் அனுப்பப்படுதலாகாது.

(9) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. 6 ம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு அமையாமல் அனுப்பப்படும் மூலச் சான்றிதழ்கள் திருப்பியனுப்பிவைக்கப்படமாட்டா.

ஜே. பி. ஈ. சிறிவர்த்தன,
பதிற்றொழில் ஆணையாளர்.

1973 ம் ஆண்டு யூன் மாதம் 6 ந் தேதி,
தொழிற்றிணைக்களம்,
தொழிற் செயலகம்,
கொழும்பு-5.

### குறித்த படிவம்

படவரைவாளர் தொழில் பயில்வோர் பதவிக்கான விண்ணப்பம்.

1. முழுப் பெயர் :————.
(தெளிவான தனி எழுத்துக்களில்)
சொந்தப் பெயர் :————.
பிற பெயர்கள் :————.

2. முகவரி :————.

3. பிறந்த தேதி : (பிறப்புச் சான்றிதழின் படியொன்று இணைக்கப்படல் வேண்டும்) :————.

(4) (அ) பிறந்த தேதி :————.
(ஆ) வயது (7.7.1973 ல்) :————.
(இ) எத்தேசத்தவர் ? பிரசா உரிமை எங்ஙனம் பெறப்பட்டது ? :————.

5. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பகாரர் :————.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை :————.
(இ) விண்ணப்பகாரரின் தந்தை வழிப் பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பகாரரின் தந்தை வழிப் பூட்டன் :————.
(விண்ணப்பகாரர் இலங்கையிற் பிறந்தவராயின், (அ) வுடன் (ஆ) வோ, அல்லது (இ), (ஈ) ஆகிய இரண்டுமோ நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையிற் பிறந்திராவிடின் (அ) வுடன் (ஆ), (இ) ஆகிய இரண்டுமோ. அல்லது (இ). (ஈ) ஆகிய இரண்டுமோ நிரப்பப்படுதல் வேண்டும்.)

6 விண்ணப்பகாரர் திருமணஞ் செய்தவரா ? செய்யாதவரா ? : ————.

7. கல்வித் தகைமைகள் :————.

8. தொழில் நுட்பத் தகைமைகள் :————.

9. பாடசாலையை அல்லது கல்லூரியை விட்டு விலகியபின், எங்கெனினும் வேலைக்கமர்ந்திருந்தால் அதனைக் குறிப்பிடுக : ————.

10. சிறப்பியல் உரிமைக் கோரிக்கைகள், தகைமைகள், பயிற்சி அல்லது அனுபவம் பற்றிய விபரங்கள் :————.

11. விண்ணப்பதாரரின் திறமை, நல்லொழுக்கம் ஆகியவை பற்றி விசாரித்தறிவதற்கு உயர் நிலையிலுள்ள இருவரின் பெயரும் முகவரியும் தருக :————.

12. சான்றிதழ் வழங்கியோர் பெயர்களும் பதவிப் பெயர்களும் : ————.

இவ்விண்ணப்பத்தில் யான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவ்விபரங்களில் எவையேனும் பொய்யானவை அல்லது தவறானவையென காணப்படுங்கால். அப் பிழையானது யான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னதாகக் கண்டுபிடிக்கப்படின் தகுதியற்றவனாக்கப்படுதற்கும். தெரிவு செய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்படின் நட்ட ஈடெதுவுமின்றி வேலை நீக்கஞ் செய்யயப்படுவதற்கும் ஆளாவேனென்பதையும் யான் அறிவேன்.

விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி :————.

6-567—14.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 64.

---

### தொழிற்றிணைக்களம்

தொழின்முறைப் பயிற்சி நிலையப் போதனாசிரியர் பதவிகள்

தொழின்முறைப் பயிற்சி நிலையங்களிலே பின்காட்டப்படும் தொழில்களுக்கான போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழே காட்டப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்திலுள்ளபடி அமைத்தெழுதப்பட்டு, 1973 ம் ஆண்டு யூலாய் மாதம் 9 ம் தேதி யன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கத்தக்கவாறு, "தொழில் ஆணையாளர், தொழிற்றிணைக்களம். தொழின்முறைப் பயிற்சிக் கிளை, 8 ம் மாடி, தொழிற் செயலகம், கொழும்பு-5" என்ற முகவரிக்கு அனுப்பப்படுதல்வேண்டும் :—

(i) பொருத்தல் ;

(ii) மோட்டர்ப் பொறிநுட்பம் ;

(iii) இழுபொறி இயக்குதலும், பொறி நுட்பமும்.

2. சம்பளம்.—எல்லாப் படிகளுமுட்பட, மாதமொன்றுக்கு ரூ. 450/- முதல் ரூ. 500/-

குறிப்பு.—தெரிவு செய்யப்படுவோருக்கு வழங்கப்படவேண்டிய சம்பளம், அவர்கள் தகுதிகள், அனுபவம், திறன் ஆகிய வற்றைக் கருத்திற்கொண்டே தீர்மானிக்கப்படுவதாகும்.

3. ஒப்பந்த நிபந்தனைகள்.—நியமனம், முதலிலே தொழில் ஆணையாளர் தீர்மானிப்பதற்கமைய, விதிக்கப்பட்ட காலமொன்றுக்கு ஒப்பந்த அடிப்படையிற் செய்யப்படுவதாகும். வேண்டுமாயின், ஒப்பந்த காலம் பின்னதாக நீடிக்கப்படுதல் கூடும். பதவி நிரந்தரமாக்கப்பட்டு, தெரிவுசெய்யப்படுவோர் அந் நிரந்தரப் பதவியில் நியமிக்கப்பட்டால், அக் காலத்தில் உளவாகும் வசதிகளுக்கு ஏற்ப, இந் நாட்டிலோ வெளிநாடுகளிலோ அவர்களுக்குப் பயிற்சியளிக்க இத் திணைக்களம் கருதுவதாகும்.

4. சேவை நிபந்தனைகள்.—

(i) தெரிவுசெய்யப்படுவோர், அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை நடைமுறையிற் கொணர்வதற்கும், குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கும், ஏலவே ஆக்கப்பட்டவையும் இனிமேல் ஆக்கப்படுவையுமான விதிகளுக்கு அமைந்தொழுகவும் வேண்டியிருக்கும்.

(ii) தெரிவுசெய்யப்படுவோர், ஒவ்வொருவரும் முதலில் ரூ 1,000 காசு பிணைப்பணமாகக் கட்டுதல் வேண்டும். பின்னதாக, வேண்டப்பெற்றால், தொழில் ஆணையாளரின் தற்துணிபின்படி பற்றுறுதி ஒப்பந்த முறி முதலானவை செய்துகொள்ளுதல் வேண்டும்.

5. வயது வரையறை.—விண்ணப்பம் செய்வோர், 25 வயதுக் குட்படாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏலவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு மேலெல்லை வயது வரையறை பொருந்துவதாகாது.)

6. விண்ணப்பகாரர் பின்வரும் தகைமைகளையுடையவராயிருத்தல் வேண்டும் :—

(i) கல்வித் தராதரங்கள்

(அ) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் உடையராயிருத்தல் வேண்டும் அல்லது பொதுத் தராதரக் கல்வி (சாதாரணதர) ப் பரீட்சையில் 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத நடவைகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும், அல்லது

(ஆ) அதற்குச் சமமான அல்லது மேலான கல்வித் தராதரப் பத்திரம்.

(ii) தொழில்நுட்பத் தகைமைகள்

(அ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கனிஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் இறுதித் தராதரப் பத்திரம், அல்லது

(ஆ) கல்லோயா அபிவிருத்திச் சபைத் தொழில்நுட்பப் பயிற்சிக் கழகத்தின் தகுதித் தேர்வுப் பத்திரம், அல்லது

(இ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் தொழின் முறைப் பயிற்சி ஆசிரியர் இறுதித் தராதரப் பத்திரம், அல்லது

(ஈ) இவற்றிற்குச் சமமான அல்லது மேலான தராதரப் பத்திரம்.

(iii) அனுபவம்.—சம்பந்தப்பட்ட தொழிலில் ஐந்தாண்டு செய்முறை அனுபவப் பத்திரம்.

குறிப்பு.—விண்ணப்பகாரர், தொழிற் பரிசோதனையொன்றின் பின்னரும், போதித்தலிற் செய்முறைப் பரிசோதனையொன்றின் பின்னரும் தெரிவு செய்யப்படுவர்.

7. இப்பொழுது அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள் அவரவர்களது திணைக்களங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படவேண்டும். தொழிற்றிணைக்களத்தில் நியமிக்கப்படுதற்கு தெரிவு செய்யப்படுமிடத்து, விண்ணப்பகாரர்களை சேவையினின்றும் விடுவிக்கச் சம்மதிப்பதாகத் திணைக்களத் தலைவர்கள் கூறுமிடத்து மட்டுமே அவ்விண்ணப்பங்கள் கவனத்திற்கெடுத்துக்கொள்ளப்படும்.

8. பின்வரும் அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் (மூலப் பத்திரங்களல்ல) விண்ணப்பங்களுடன் இணைக்கப்படுதல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவத்தாட்சிப் பத்திரம் (முக்கிய குறிப்பு.—ஞானஸ்நான அத்தாட்சிப் பத்திரம், அல்லது உதவி பெறும் பாடசாலைகளின் ஒழுங்கு விதிக்கோவையின் நோக்கத்திற்காக விநியோகிக்கப்படும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஆ) (i) மிகவுயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(ii) தொழில்நுட்பக் கல்வித் தராதரப் பத்திரங்கள்.

(iii) சம்பந்தப்பட்ட தொழிலில் ஐந்து (5) ஆண்டு செய்முறை அனுபவம் பற்றிய பத்திரம்.

(இ) சமீபத்திற் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள் (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளோர் இப் பத்திரங்களை அனுப்பவேண்டியதில்லை).

விண்ணப்பகாரர் தங்கள் மூலப் பத்திரங்களை நேர்முகப் பரீட்சையிற் சமர்ப்பித்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் தேதியும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

டபிள்யு. எல். பி. த மெல்,
தொழில் ஆணையாளர்.

தொழிற்றிணைக்களம்,
தொழிற் செயலகம்,
கொழும்பு-5,
1973-ம் ஆண்டு யூன் மாதம் 06-ந் தேதி.

### விண்ணப்பப் பத்திரம்

தொழிற்றிணைக்களம், தொழின்முறைப் பயிற்சி நிலையங்களில் போதனாசிரியர் பதவிகள்—பொருத்தல்*/மோட்டோர்ப் பொறிநுட்பம்/இழுபொறி இயக்குதலும், பொறிநுட்பமும்

1. முழுப்பெயர் :————.
(தனித்தனி எழுத்துக்களில்)

2. விலாசம் :————.

3. வயது : 09.07.1973-ல் வருடம் :———— மாதம் :———— நாட்கள் :————.
பிறந்த தேதி :————.

4. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பகாரரது :————.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தையினது :————.

5. எத்தேசத்தவர் ? :————.

6. கல்வித் தகைமைகள் :————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

7. (அ) சிங்களத்தில் :————.
(ஆ) தமிழில் :————.
(இ) ஆங்கிலத்தில் :————.
போதிப்பதற்குத் தகுதியுடையவரா ?

8. தொழில்நுட்பக் கல்வித் தகைமைகள் :————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).

9. தொழில் அனுபவம் பற்றிய முழு விபரம் :————.
(அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிக்ள் இணைக்கப்படல் வேண்டும்).

10. நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கியோரின் பெயர்கள் :—
(1) ————.
(2) ————.

11. மற்றும் விபரங்கள் :————.

————,
விண்ணப்பகாரரின் ஒப்பம்.

தேதி :————.

*பொருத்தமற்றவற்றைக் நீக்கிவிடுக. (விண்ணப்பகாரர் ஒன்றுக்கு மேற்பட்ட தொழிலினங்களுக்கு விண்ணப்பிப்பவராயின், அத்தகைய தொழிலொவ்வொன்றிற்கும் தனித்தனியே விண்ணப்பித்தல் வேண்டும்).

6-568—14.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 64

---

### கட்டடத் திணைக்களம்

கண்காணிப்பு ஓவசியர் பதவிகள்

கட்டடத் திணைக்களத்தில் மேற்கூறிய பதவிகளுக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் விளம்பரத்தில் கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கிணங்க விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ந் திகதி அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக கட்டடத் திணைக்கள அதிபர் (நிர்வாகக் கிளை), கட்டடத் திணைக்களம், கொழும்பு 1 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பங்கள் அனுப்பப்படும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் “கண்காணிப்பு ஓவசியர் பதவிகளுக்கான விண்ணப்பம்” என்று தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

2. தேவைப்படும் தகைமைகள்

விண்ணப்பதாரர்கள்—

(i) 1973.06.16 இல் 18 வயதுக்குக் குறையாமலும், 25 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.) நல்ல உடற்கட்டும், கண்பார்வையும் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் தூயகணிதத்தோடு பௌதிகம்/இரசாயனம் ஒரு பாடமாக இருக்க சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (சாதாரணதரம்) தூயகணிதம், சிங்களம்/தமிழ் பாஷை, பௌதிகம்/இரசாயனம் உட்பட ஆறு பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத இருக்கைகளில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

அல்லது

(iv) வேறு உயர்தரமுள்ள ஒரு பரீட்சையில் தூயகணிதம், பௌதிகம்/இரசாயனம் உட்படச் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—பிரயோக கணிதம் அல்லது உயர்கணிதத்தில் சித்தியடைந்தவர்கட்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

அல்லது

(v) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் நடாத்தப்படும் கனிஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்கான (2 ஆண்டு) பயிற்சியில் சித்தியெய்தியவர்களாய் அல்லது ஹாடி நுட்பப் பயிற்சி நிலையத்தின் தகுதித் தேர்வுப் பத்திரம் (அல்லது சமமான) பெற்றவர்களாய் இருப்பதோடு—

(அ) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில்,

அல்லது

(ஆ) எண்கணிதம், தமிழ்/சிங்களம் ஆகிய பாடங்கள் உட்பட பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத இருக்கைகளில் கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில்

அல்லது

(இ) வேறு உயர்ந்த ஒரு பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பக்காரர்கள் கீழ்கண்ட அத்தாட்சிப்பத்திரங்களின் பிரதிகளை (மூலப்பிரதிகளல்ல) விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடைப் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்டத்தின் நோக்கத்துக்காகக் கொடுக்கப்படும் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

(ஆ) பெறப்பட்ட கல்வித் தகைமைச் சான்றிதழ்.

(இ) தொழில் நுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(ஈ) அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள்.

4. தகைமையுள்ள விண்ணப்பதாரர்கள் ஒரு குறித்த திகதியில் கொழும்பில் நடாத்தப்படும் ஒரு நேர்முகப் பரீட்சைக்கு சமூகம் கொடுக்க வேண்டியிருக்கும். இதற்கான பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

5. (i) மேல் குறித்த 2 (v) இன் கீழ் தகைமை பெறுபவர்கள் தவிர, தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர்கள் கண்காணிப்பு ஓவசியர்கள் சேவையின் நாலாந்தரத்துக்கு நியமிக்கப்படுவதன் முன்பு, திணைக்களப் பயிற்சி வகுப்பொன்றில் 12 மாத காலத்துக்கு பயிற்சி பெறவேண்டும். பயிற்சி வகுப்பில் சேர்க்கப்பட்டதும், பயிற்சி பெறுபவர்கள், தாம் தமது படிப்பைச் சிரத்தையோடும் விசுவாசத்தோடும் பின்பற்றுவர் என்றும், பயிற்சி முடிந்ததும், (பணிக்கப்படுமிடத்து) கண்காணிப்பு ஓவர்சியர்களாக 7 ஆண்டுகளுக்குக் குறையாமல் திணைக்களத்திற்கு சேவை செய்வர் என்றும் கட்டடத்திணைக்களப் பணிப்பாளரோடு ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வர். இவ்வொப்பந்த நிபந்தனைகளைச் சரிவர நிறைவேற்றுவதை நிச்சயம் செய்தற் பொருட்டு, பயிற்சியாளர்களும், அவர் தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரும் பிணையாக நிற்க ரூபா 1,000/- க்கு ஒரு முறியால் இணைக்கப்படுவர்.

(ii) பயிற்சியாளர்கள் பயிற்சிக் காலத்தில் நாளொன்றுக்கு படியாக ரூபா 7/50 (படிகள் உட்பட) பெறுவர்.

(iii) பயிற்சி காலமும் முடிந்ததும், பயிற்சியாளர்கள் எவ்வித நியமனத்திற்காகவும் திணைக்களத்தின் மீது உரிமை கோர முடியாது. எனினும், காலி இடங்கள் இருக்குமாயின் போதிய நியமனம் அடைந்துள்ளவர்கள் தற்காலிகக் கண்காணிப்பு ஓவசியர்கள், தரம் நாலுக்கு ரூபா 3,000—90 × 11—3,990/— சம்பள அளவுத்திட்டத்தில் நியமிக்கப்படுவர்.

6. அரசாங்க சேவையில் உள்ள தகைமை வாய்ந்தவர்களது விண்ணப்பங்கள் அவரவர் திணைக்களத் தலைவர்களுக்கூடாகவே அனுப்பப்படல் வேண்டும். உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை திணைக்களத்தலைவர்கள் அனுப்பும்போது குறித்த விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டால் விடுவிக்கப்படுவார்களா அன்றோ என்பதைக் குறிப்பிடவேண்டும்.

7. இவ்வர்த்தமானியின் பகுதி (I) இன் பிரிவு (IIஅ) இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப்பகுதிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் நிபந்தனைகளையும் கவனிக்கவும்.

ஏ. சி. விக்கிரமசிங்ஹ,
கட்டடத்திணைக்களப் பதிற் பணிப்பாளர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 8 ந் உ.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

கட்டடத் திணைக்கள கண்காணிப்பு ஓவசியர்களின் பதவிக்கான விண்ணப்பப் பத்திரம்

1. (1) பெயர் :————.
   (2) முழுப்பெயர் :————.
2. அஞ்சல் முகவரி :————.
3. (அ) பிறந்த திகதியும் இடமும் :————.
   (பிறப்புச் சாட்சிப் பத்திரப் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
   (ஆ) 1973.06.16 திகதியில் வயது :—
   வருடம் :————. மாதம் :————.
4. (அ) தேசிய இனம் :————.
   (ஆ) வம்சாவழிப் பிரசையா அல்லது பதிவுப் பிரசையா : ————.
5. (அ) விண்ணப்பகாரரின் தந்தையின் பிறப்பிடம் :————.
   (ஆ) விண்ணப்பக்காரரின் தந்தைவழிப் பேரன் பிறப்பிடம் : ————.
6. தற்பொழுது ஏதும் பதவி வகிப்பின்—
   (1) தற்போதைய பதவி :————.
   (2) திணைக்களம் :————.
   (3) சம்பள விபரங்கள் :————.
7. கல்வித் தகைமைகள்—
   (i) சித்தியெய்தியுள்ள உயர்தரப் பரீட்சையும், சித்தியெய்திய திகதியும் :————.
   (ii) கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை (சாதாரணம்) அல்லது சி. பா. த. பத்திரம் பரீட்சையில் சித்தியெய்திய பாடங்கள் (ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற தேர்ச்சியைக் குறிப்பிடுக.)

   1. ………………… 2. …………………
   3. ………………… 4. …………………
   5. ………………… 6. …………………
   7. ………………… 8. …………………
8. தொழில் நுட்பத் தகைமைகள் :————.
   (தொழில் நுட்பத் தகைமைகளின் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்தோடு இணைக்கவும்)
9. இதற்கு முன்புள்ள அனுபவ விவரங்கள் :————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும், சரியானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன். அத்துடன் இதன்கண் தரப்பட்டுள்ள விடயங்கள் பிழையானவையாகவோ சரியற்றவையாகவோ காணப்பட்டால் தெரிவிற்குமுன் தகுதியற்றவரென நீக்கப்படுவதற்கும், தெரிவிற்குப்பின் நட்ட ஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுவதற்கும் இடமுண்டு என்பதை நன்கு அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

6-570—14.06.73 ந் திகதியவர்த்தமானி இல. 64

---

### சௌக்கிய அமைச்சு

சௌக்கிய சேவைகள் திணைக்களத்தின் பிரதி நிருவாகத் தர மருத்துவ உத்தியோகத்தர்கள் பதவிகளுக்கு சௌக்கியத் திணைக்கள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சௌக்கிய அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டிய இந்த விண்ணப்பங்கள் முடிவுறுந் திகதி 1973 ஜுலை மாதம் 7 ஆந் திகதியாகும்.

மேலதிக விபரங்களுக்கு இதன் கீழ் ஒப்பமிட்டிருப்பவருடன் தொடர்புகொள்ளவும். கடிதத் தொடர்புகள் இந்த உத்தியோகத்தரின் சொந்தப் பெயருக்கு விலாசமிடப்பட்டிருத்தல் கூடாது.

ஜி. அமரசேன,
பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்),
செயலாளருக்காக,
சௌக்கிய அமைச்சு.

சௌக்கிய அமைச்சு,
காலிமுகச் செயலகம்,
த. பெ. இலக்கம் 500,
கொழும்பு 1,
1973, மே 31 ந் திகதி.

6-477—14.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 64

## ஆயுள்வேதத் திணைக்களம்

### II ஆம் தர விரிவுரையாளர் பதவி (ஆயுள்வேதம்) ஆயுள்வேதக் கல்லூரி

ஆயுள்வேத திணைக்களத்தில் அயுள்வேதக் கல்லூரி II ஆம் தர விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் கீழே தரப்பட்டுள்ளதைப் போன்ற படிவத்தில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் திகதிகளன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், சுகாதார அமைச்சு, கொழும்பு-1 என்ற விலாசத்துக்கு வந்து சேரவேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 5.7.1973.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 12.7.1973.

குறிப்பு.—(i) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது என்ற குற்றச் சாட்டு எதுவும் கவனிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புதற்குக் கடைசி நாட்கள் வரை தாமதிப்பவர்கள் அதனுல் ஏற்படும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(ii) வெளிநாட்டிலுள்ள வேட்பாளர்கள் விரும்பினுல் தாம் வதியும் நாட்டிலுள்ள அல்லது அதற்கண்மை நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்தில், சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்புமாறு குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் விண்ணப்பப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

(iii) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெற வெளிநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் இலங்கையரான உத்தியோகத்தர்கள், சேவைக்கு உடற்தகுதி உடையவரென்பதை உறுதிப்படுத்தற்பொருட்டு, அங்கீகாரம் பெற்ற மருத்துவத் தொழில் புரிவோரால் சோதிக்கப்படுதற்கு, அவர்கள் பிரசன்னமாகுமாறு வேண்டப்படுவர். இத்தகைய சோதனைக்கான கட்டணமும், இலங்கைக்கு வருதற்கு ஏற்படும் பயணச் செலவும் உத்தியோகத்தராலேயே செலுத்தப்பட வேண்டும்.

2. ஒப்பந்த நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.—(i) பதவி தற்காலிகமானது. அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவு தொகைகள் செலுத்தப்பட வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படும் வேட்பாளருக்குத் தனிப்பட்ட முறையில் வைத்தியத் தொழில் புரியும் உரிமை இருக்கமாட்டாது.

3. சம்பள விகிதம்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள விகிதம் வருமாறு :—

ஆண்டொன்றுக்கு ரூ. 6,720—12 × 360—ரூ. 11,040. ரூ. 9,600க்கு முன்னர் திறமைகாண் தடை ஒன்று இருக்கும். திறமைகாண் தடைக்குமேல் பதவியேற்றம், உத்தியோகத்தரது மூலமுதலான ஆராய்ச்சியில் அல்லது ஆயுள்வேதம் சம்பந்தமாக அவர் வெளியிட்ட பல பிரசுரங்களில் அல்லது பட்டத்துக்குப் பின்னைய அவரது உயர் தராதரங்களில் தங்கியுள்ளது.

4. வேண்டப்படும் கல்வித் தகைமைகள்.—ஒவ்வொரு வேட்பாளரும் பின்வருவனவற்றைத் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவ வேண்டும் :—

(அ) சிறந்த நற்குணமும் நல்ல உடற் சுகமும் பெற்றிருத்தல் ;

(ஆ) 14.6.1973 ஆம் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் (இத்திணைக்களத்தில் உள்ளவர்களுக்கு மேல்வயதெல்லை ஏற்புடைத்தன்று) ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஆயுள்வேதக் கல்லூரியின் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு சிறப்பு டிப்ளோமா பெற்றிருத்தல் (அல்லது அரசாங்க ஆயுள்வேதக் கல்லூரியிலிருந்து 1965 ஆம் ஆண்டுக்கு முன்னர் முதலாம் வகுப்பு அல்லது சிறப்பு டிப்ளோமா பெற்றிருத்தல்) ;

அல்லது

ஆயுள்வேதத்தில் பட்டத்திற்குப் பின்னைய தராதரம் பெற்றிருத்தல்,

சமஸ்கிருதம் அல்லது ஹிந்தி மொழி அறிவு பெற்றிருத்தல் மேலும் ஒரு தகைமையாகும்.

5. பின்வரும் பத்திரங்களில் எவற்றையேனும் அல்லது எல்லாவற்றையேனும் கேட்கப்படும்போது சமர்ப்பிக்குமாறு வேட்பாளர்கள் வேண்டப்படுவர்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.—ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்கு அமையக் கொடுக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப்படிப்பு அல்லது ஆகக்கூடிய கல்வித் தகைமைச் சான்றிதழ் ;

(இ) குணச் சான்றிதழ்கள் இரண்டு. இவற்றில் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர்தொழிற் தகைமைச் சான்றிதழ் அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ் அல்லது இவை இரண்டும் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்துள்ள மிகவுயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) பத்திரங்களோ அல்லது பத்திரங்களது படிகளோ விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படக் கூடாது ;

(ii) பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் உள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்கள் திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறெந்தக் கடிதத் தொடர்புகளும் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு விலாசமிடப்பட வேண்டுமே தவிர மற்றெந்த உத்தியோகத்தருக்கும் அல்ல.

8. இந்த வர்த்தமானியில் பகுதி I பிரிவு II அ இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவி நியமனங்களுக்கு ஏற்புடையனவாகிய பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகிறது.

சி. ஈ. எஸ். வீரதுங்க,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு-1,
31.5.1973.

இல :...............

(அலுவலக பாவிப்புக்கு மாத்திரம்)

சுகாதார அமைச்சு

விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பிக்கும் பதவி :.........................................பதவி
.............................திணைக்களம்.

2. முழுப் பெயர் :————.
(தெளிவான எழுத்துக்களில்)

3. அஞ்சல் முகவரி :————.
(முகவரியில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்க வேண்டும்.)

4. பிறந்த திகதி :—
வருடம் :————.
மாதம் :————.
திகதி :————.

5. உள்நாட்டு விண்ணப்பங்கள் முடிவுறும் திகதியில் சரியான வயது :—
வருடங்கள் :————.
மாதங்கள் :————.
நாட்கள் :————.

6. நீர் ஓர் இலங்கைப் பிரஜையா ? வம்சாவளியினுலா அல்லது பதிவினுலா என்பதைக் குறிப்பிடுக :————.
(தயவு கூர்ந்து குறிப்பு 2 ஐக் கவனிக்க.)

7. பிறந்த இடம் :—(தயவுகூர்ந்து குறிப்பு 2 ஐக் கவனிக்க)
(அ) விண்ணப்பகாரர் :————.
(ஆ) தந்தை :————.
(இ) தந்தைவழிப் பாட்டன் :————.
(ஈ) தந்தைவழிப் பூட்டன் :————.

8. (அ) பால் :————.
(ஆ) திருமணமானவர், தனியானவர், தாரமிழந்தவர் :——

9. பின்வருவனவற்றில் சித்தி எய்திய உயர் பரீட்சைகள் :——
(அ) சிங்களம் (ஆ) தமிழ் (இ) ஆங்கிலம்
(1)
(2)
(3)

10. 12 வயது தொடக்கம் சென்ற பாடசாலைகள், கல்லூரிகள், பிற தாபன தாபனங்கள் ஆதியன :————.

| பொதுக் கல்வி. | | | உயர் தொழிற் கல்வி | |
|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | ஸ்தாபனம் | தொடக்கம் வரை |
| (1) | | | (1) | |
| (2) | | | (2) | |
| (3) | | | (3) | |
| (4) | | | (4) | |
| (5) | | | (5) | |

11. விளையாட்டுக்களில் பெற்ற சிறப்புக்களும் இத்துறையில் வகித்த பொறுப்பான பதவிகளும் :————.

12. (அ) நீர் பணமுடை எதுவும் இல்லாதவரா? முடை இருப்பின் எவ்வளவுக்கு? :————.

(ஆ) நீதிமன்றம் ஒன்றில் குற்றவியற் குற்றமெதுக்கும் நீர் குற்றஞ் சாட்டப்பட்டவரா? அவ்வாறாயின் திகதி, வழக்கு இலக்கம் ஆதியவற்றோடு முழு விபரங்களையும் தருக :————.

13. உயர்கல்வி, உயர்தொழில், தொழில் நுட்பத் தகைமைகள் : ————.

(பட்டங்கள், சிறப்புக்கள், உயர்தொழில், அல்லது இரண்டினதும் தகைமைகளைத் திகதி, வகுப்பில் சித்தி பெற்றிருப்பின் அவை, பாடங்கள், நிலையங்களின் பெயர் கள் ஆகிய விபரங்களோடு தருக)

14. தற்போதைய தொழிலும், முன்னர் செய்த தொழில் ஏது மிருப்பின் அதுவும் (தொழிலில் சேர்ந்த, விலகிய திகதி களும் பெற்ற ஆண்டுச் சம்பளமும் கொடுக்கப்படுதல் வேண்டும் :————.

| | பதவி | தொடக்கம் | வரை | ஆண்டுச்சம்பளம் ரூபா |
|---|---|---|---|---|
| (1) | ........................................ | | | |
| (2) | ........................................ | | | |
| (3) | ........................................ | | | |
| (4) | ........................................ | | | |
| (5) | ........................................ | | | |
| (6) | ........................................ | | | |
| (7) | ........................................ | | | |
| (8) | ........................................ | | | |

முக்கியம்.—அரசாங்கத் தொழிலைவிட்டு விலகிய காரணத்தை இதன் கீழுள்ள 16 ஆம் கூண்டில் குறிப்பிடவும்.

15. சிறப்புத் தகைமைகள்.—அறிவித்தலிலுள்ள சிறப்புத் தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இரண்டும் உடையவரா? அவ்வாறு உடையவராயின் அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக. (வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புத் தேவை களைப் பார்க்க.) :————.

16. மேலும் விபரங்கள் ஏதுமிருப்பின் :————.

17. இந்த விண்ணப்பத்தில் என்னால் அளிக்கப்பட்டுள்ள விப ரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதன் கண் உள்ள விபரங்கள் எவையும் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக் கப்படுமிடத்து தகைமை நீக்கஞ் செய்யப்படுதற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து நட்ட ஈடு எதுவுமின்றி வேலைநீக்கஞ் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதனை யான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

குறிப்புகள்

1. பதிவு காரணமாக இலங்கைப் பிரஜையாயின் தொடர் எண்ணையும் பிரஜாவுரிமைச் சான்றிதழின் திகதியையும் குறிப் பிடுக.

2. விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் (ஆ) அல்லது (இ), (ஈ) ஆகிய இரண்டும் நிரப்பப்படல் வேண் டும். அவர் இலங்கையில் பிறக்காதவராயின் (அ) வைவிட (ஆ) அல்லது (இ), (ஈ) நிரப்பப்படல் வேண்டும்.

வேட்பாளர் அரசாங்க சேவையிலுள்ளவராயின் திணைக்களத் தலைவரின் அறிக்கை :

————,
திணைக்களத் தலைவரின் பெயரும்
பதவிப் பெயரும்.

திகதி :————.

6-455—14.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 64

---

**அம்பாறை மாவட்டத்தில் பாணமைப் பற்றுப் பிரிவுக்கு (கண்டிய/ பொது) விவாகப் பதிவுக்கடமைக்கு பொத்துவில்லில் காரியாலயமமைக்கும் பதிவாளர் பதவி**

இவ் விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும், சரியானவையென நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது சரியற்றவை என்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனுக்கப் படுவேன் என்றும், நியமனம் பெற்றபின் சரியற்றவையென்று கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவியால் நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

(அபேட்சகர் அரசாங்க சேவையில் இருப்பவரெனின் அப்பகுதித் தலைவரின் அறிக்கை)

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :————.

6-540—14.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 64

---

இல. 1/15/60/9

## கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

### கூட்டுறவுப் பரிசோதகர் தரம் II பதவிகள்

கூட்டுறவுப் பரிசோதகர் தரம் II பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஆண்களிடமிருந்தும், பெண்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.

2. **விண்ணப்பங்கள்.**—(1) விண்ணப்பப்படிவங்கள் கொழும்பு 1, டியூக் வீதியிலுள்ள கூட்டுறவு மாகாண வங்கிக் கட்டிடத்திலிருக்கும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் 14.6.1973 முதல் 11.7.73 வரை நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம். அல்லது தபால் மூலம் பெற விரும்புகிறவர்கள் தபால் பெட்டி இல. 419, கொழும்பு என்ற முகவரியிலுள்ள கூட்டுறவு ஆணையாளரிடமிருந்து 14.6.73 முதல் 10.7.73 வரை பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் ஒவ்வொரு படிவம் மட்டுமே வழங்கப்படும்.

இப்பதவிக்கு விண்ணப்பஞ் செய்வதற்காக தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு விண்ணப்பஞ் செய்யும் ஒவ்வொருவரும் விரைவில் விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைப்பதை எளிதாக்குவதற்குக் கடிதத்துடன் முத்திரையிடாத ஒரு நீண்ட தபாலுறையில் தமது விலாசத்தையும், உறையின் இடதுபுற மேல் மூலையில் பதவியின் பெயரையும் எழுதி வைத்து அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர்.

குறிப்பு :—ஒரு வரையறுத்த தொகைப் பிரதிகள் மாவட்டங்களிலுள்ள கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்களின் எல்லா அலுவலகங்களிலும் நேரில் சென்று பெறுபவர்கட்கு, 14.6.73 முதல் 10.7.73 வரை (படிவங்கள் கிடைக்கத்தக்கதைப் பொறுத்து) கிடைக்கும். விண்ணப்பப்படிவங்களை மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் நேரத்துடன் சமீபத்திலுள்ள மாவட்ட அலுவலகத்திற்குப் போகுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

(2) விண்ணப்பதாரர்கள் அச்சடித்த படிவத்தை எவ்வகையிலும் திருத்தலாகாது. அச்சடித்த படிவத்தில் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(3) குறிக்கப்பட்ட படிவத்தில் அமைந்த விண்ணப்பங்கள் த. பெ. இல. 419, கொழும்பிலுள்ள கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு 13.7.73 திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கும் வண்ணம் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். அத்திகதிக்கு பிறகு கிடைக்கும் எவ்விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். உறையின் இடது புற மேல் மூலையில் பதவிப் பெயர் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

(4) விண்ணப்பம் ரூபா 2 பெறுமதியுள்ள முத்திரைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். இம்முத்திரைகள் விண்ணப்பதாரரின் கையொப்பத்தினாலும் திகதியாலும் செல்லுபடியாகாமல் செய்தல் வேண்டும்.

(5) ஏற்கனவே அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பதாரர்கள் தாங்கள் கடமையாற்றும் திணைக்களத்தின் அதிபருக்கு ஊடாகவே தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

(6) விண்ணப்பங்கள் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு அல்லது வேறு உத்தியோகத்தரெவருக்கும் தனிப்பட்ட சொந்த முகவரிக்கு அனுப்பப்படுதலாகாது.

3. சம்பளம்.—கூட்டுறவுப் பரிசோதகர் II ஆந் தரத்திற்குரிய திரட்டிய சம்பளத்திட்டம் பின்வருமாறுரும் :—

தகுதிகாண் நிலையிலிருக்கும் பொழுது :—ரூபா 3,000—90 இல் 2—ரூபா 3,180.

உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் :—ரூபா 3,576—144 இல் 21—100 இல் 4—ரூபா 7,320.

(ரூபா 5736/- உக்கு முன்னர் வினைத்திறமை காண் தடையுண்டு. பரிசோதகரின் 2 ஆம் பரீட்சை பூரணப்படுத்தப்படும் வரை வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின் பேரில் பதவி உயர்வு அளிக்கப்படமாட்டாது.)

பதவி உயர்வு வாய்ப்புக்கள்.—II ந் தரக் கூட்டுறவுப் பரிசோதகர்கள் கூட்டுறவு பரிசோதகர் சேவையின் உயர்தரங்களுக்கு பதவி உயர்வு பெறத் தகுதியுடையவர்களாவார். அதாவது—

தரம் I—(திரட்டிய) ரூபா 7,500—180 இல் 3—240 இல் 2—ரூபா 8,520 விசேட தரம் (திரட்டிய) ரூபா 8,760—340 இல் 3—ரூபா 9,480 அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கிணங்க வெற்றிடங்கள் ஏற்படும் பொழுது இந்தப் பதவி உயர்வு வாய்ப்புக்கள் ஏற்படும்.

4. சேவை நிபந்தனைகள்.—(1) இவ்வர்த்தமானியின் பகுதி I பிரிவு II இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு செய்யப்படும் நியமிப்புக்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

(2) தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் நியமிப்புத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர். அவர்களின் பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதிய மற்றதுமாகும். அவர்கள் அரசாங்க சேவை சகாய நிதிக்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் நியமனத்திகதியன்று அரசாங்க சேவையில்/உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரிய பதவிகள் வகிப்பவர்களாய் இருப்பின் அவர்கள் தொடர்ந்து ஓய்வூதிய உரிமையை அனுபவிப்பர்.

(3) தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் இடமாற்றத்திற்கு ஆளாவர், அத்துடன் இலங்கையில் எந்நிலையத்திற்கும் நியமிக்கப்படுவர்.

(4) அவர்கள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளிற்கும் அரசாங்க மொழிக் கொள்கையை செயல்படுத்துவதற்காக இப்பொழுதுள்ள ஏதேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது வருங்காலத்தில் புகுத்தப்படக்கூடியனவான ஏதேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுக வேண்டப்படுவர்.

தகைமைப் பரீட்சையை (உபபிரிவு 5 (iii) ஐப் பார்க்க) சிங்கள மொழி மூலம் எடுத்து சித்தியெய்தியிராதவரும் நியமிக்கப்படுவதற்கு தெரிவு செய்யப்படுபவருமான அபேட்சகர்கள், தமது தகுதிகாண் காலத்தில் சிங்களத்தில் கருமமாற்றும் அறிவினைப் பெறுதல் வேண்டும். அவர்கள் பின்வரும் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர்.

| பரீட்சைத் தரம் | ... பரீட்சைகளில் சித்தியெய்துவதற்கு அனுமதிக்கப்பட்ட காலம் |
|---|---|
| I ந் தரத் தேர்ச்சிப் பரீட்சை | நியமனத் திகதியிலிருந்து ஓராண்டு |
| II ந் தரத் தேர்ச்சிப் பரீட்சை (5 ம் வகுப்புத் தரம்) | ... நியமனத் திகதியிலிருந்து ஈராண்டுகள் |
| III ந் தரத் தேர்ச்சிப் பரீட்சை ; (8 ம் வகுப்புத் தரம்) | ... நியமனத் திகதியிலிருந்து மூன்றாண்டுகள். |

குறிக்கப்பட்டுள்ள காலத்துக்குள் I ம் தர, II ம் தர, III ம் தரத் தேர்ச்சிச் சோதனைகளில் தேறத் தவறின் ஆண்டேற்றங்கள் இடை நிறுத்தப்படும். விதிக்கப்பட்ட காலத்துக்கு அப்பால் மேலும் ஆறு மாத காலத்துக்குள் ஒவ்வொரு சோதனையிலும் சித்தியடையாவிடின் இடை நிறுத்தம் நிறுத்தமாக மாற்றப்படும். குறித்த சோதனையில் சித்தியடையும் வரை அத்தகைய நிறுத்தம் செயற்படும்.

பரீட்சையில் சித்தியடைவதற்கு அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள் பரீட்சை நடைபெறாவிடின், அனுமதித்த காலம் கடந்த பின்னர் முதன் முதல் நடைபெறும் பரீட்சைத் தேதிவரையும் நீடித்திருப்பதாகக் கருதப்படலாம்.

தாபனச் சட்டக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 9.6 இலிருந்து 9.10 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள், தகுதிகாண் கால முடிவில், குறிப்பிடப்பட்டுள்ள தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறிய உத்தியோகத்தர்கட்கு ஏற்புடைத்தாகும்.

(5) தகுதி காண் கால முடிவில் இவ்விண்ணப்பதாரரின் சேவை உறுதிப் படுத்தல் பின்வருவனவற்றில் தங்கியிருக்கும் :—

(அ) திருப்தியான வேலையும் நன்னடத்தையும்,

(ஆ) மேலே கூறப்பட்ட III ஆம் தர தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியெய்தல்.

(இ) கூட்டுறவுக் கல்லூரியினால் நடாத்தப்படும் கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கான முதற் பரீட்சையில் சித்தியெய்தல்.

(6) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், அவர்கள் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் (வழமையாக 3 வருடங்களுக்குப் பின்னர் தான் உறுதிப்படுத்தப்படும்.) மேலும் 3 வருடங்கள் திணைக்களத்தில் சேவை புரிவதாக உடன்படிக்கை செய்தல் வேண்டும். அவர்கள், பிணையுடன் கூடவே ரூபா 2,500/- உக்காய முறி ஒன்றினையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. தகைமைகள்.—பொது நிபந்தனைகள்—

(i) அபேட்சகர்கள் நற்குணப் பண்புடையவர்களாகவிருத்தல் வேண்டும்,

(ii) அபேட்சகர்கள் "இலங்கையர்களாக" இருத்தல் வேண்டும்.

அரசாங்க சேவைக்கு ஆட்சேர்க்கும் நோக்கங்கள் யாவிற்கும் "இலங்கையர்" என்னும் பதத்திற்கு பரம்பரையினால் அல்லது பதிவினால் இலங்கைப் பிரசை என வரைவிலக்கணம் கூறப்படுகிறது.

(iii) விண்ணப்பதாரர்கள்—

(அ) (i) சி. பா. த. பரீட்சையில் எண்கணிதத்திலோ, வர்த்தக கணிதத்திலோ அல்லது கணிதத்திலோ திறமைச்சித்தியுடன், சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி, எண்கணிதம், அல்லது கணிதம் அல்லது வர்த்தக கணிதம் ஆகியவை உட்பட ஆறு பாடங்களில் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும். இச்சித்திகளில் எண்கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது கணிதம் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். தேவைப்படும் சித்திகளை இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன்,

(ஆ) பின்வரும் தகைமைகளில் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(1) (iii) (அ) ம் உபபிரிவில் குறிக்கப்பட்டுள்ள தகுதிப் பரீட்சையில் எண்கணிதம், வர்த்தக கணிதம் அல்லது கணிதத்தைத் தவிர்ந்த ஏனைய நான்கு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றவராக இருத்தல் வேண்டும்,

அல்லது

(2) மேலே உபபிரிவு அல்லது (iii) (அ) இல் குறிக்கப்பட்டிருக்கும் பரீட்சையைப் பார்க்க உயர்ந்த பரீட்சை ஒன்றில் சித்தியெய்தியிருக்க வேண்டும்.

(குறிப்பு.— க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் ஒரே முறையில் மூன்று பாடங்களில் சித்தி ஏற்புடைத்து.)

அல்லது

(3) கூட்டுறவு அல்லது பாடசாலையினால் வழங்கப்படும் கூட்டுறவு ஊழியர் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அதாவது நான்கு மாதங்களுக்கான கூட்டுறவு ஊழியர் சான்றிதழ் (சாதாரண) அல்லது 9 மாதங்கட்கான கூட்டுறவு ஊழியர் சான்றிதழ் (உயர்தர), அல்லது

(4) ஐந்து வருட நிரந்தரச் சேவை பூர்த்தியாகிய கூட்டுறவுத் திணைக்களத்தைச் சேர்ந்த சிற்றூழியர் அல்லது 13.7.73 திகதியில் சிறு கைத்தொழில் திணைக்களத்தில் ஐந்து வருட நிரந்தர சேவை பூர்த்தியாகியுள்ள செய்முறை காட்டுபவர்களாக இருத்தல் வேண்டும்,

(iv) (அ) விண்ணப்பதாரர் 13.7.73 திகதியில் 19 வயதிற்குக் குறையாதவராயும் 30 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) இத்தேவை கூட்டுறவுத் திணைக்களத்தைச் சேர்ந்த சிற்றூழியர் விடயத்திலும் சிறு கைத்தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த செய்முறை காட்டுநரின் விடயத்திலும் 5 (iii) ம் பந்தியில் குறிப்பிட்ட தகைமைகளை உடையவராயின் விதிவிலக்காக அமையும்.

6. தகைமைச் சாதனங்கள்.—

(i) விண்ணப்பத்துடன் எவ்வகையான சாதனங்களும் அனுப்பப்படலாகாது. ஆனால் படிவத்தில் தேவையான விபரங்கள் கோரப்பட்டவிதத்தில் தரப்படல் வேண்டும். எல்லாவகையிலும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பம் அதன் சொந்தத்திறமைகளின் பேரில் பரிசிலனை செய்யப்படுவதோடு நிராகரிக்கவும் படலாம்.

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் தமது தகைமைத் திறனை நிரூபிப்பதற்குச் சாதனச் சான்றுகள் காட்டுமாறு கேட்கப்படுவர். அத்தகைய பரீட்சார்த்திகள் அச்சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் கேட்கப்படுமிடத்து அவைகளைப் பதிவுத் தபால் மூலம் காலதாமதமின்றி அனுப்ப வேண்டும்.

(iii) பின்வரும் சாதனங்கள் அவசியமாகும் :—

(அ) பொறுப்புடைய ஒருவரால் கையொப்பமிடப்பட்ட நற்குணப் பண்புச் சான்றிதழ் ;

குறிப்பு.—அபேட்சகரொருவர் அரசாங்க அல்லது உதவிபெறும் பாடசாலையொன்றில் கல்வி கற்றுக் கொண்டிருப்பின் அல்லது அத்தகைய பாடசாலையிலிருந்து அண்மையில் விலகியிருப்பின், அத்தகைய பாடசாலை அதிபரிடமிருந்து நற்குணப்பண்புச் சான்றிதழைப் பெறுதல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து, அதை சமாதான நீதவான், வழக்குரைஞர் (அப்புக்காத்து), வழக்கறிஞர் (பிறக்கிராசியர்) அல்லது நொத்தாரிசு, மாவட்ட அரசிறை உத்தியோகத்தர் (டி. ஆர். ஓ), ஆண்டுக்கு சம்பளமாக, 4,800 ரூபா அல்லது அதற்கு மேல் பெறும் ஒரு நிரந்தரமான அரசாங்க உத்தியோகத்தர் அல்லது பொதுவாகக் கூறின், நன்கு அறியப்பட்டவரும் உடனடியாகத் தொடர்பு கொள்ளப்படக் கூடியவருமான யாரேனும் ஒருவர் ஆகியவர்களில் எவராவது ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு நற்குணப் பண்புச் சான்றிதழை வழங்குபவரின் பெயரும் பதவிப் பெயரும் முகவரியும் அதில் தெளிவாகக் காட்டப்படுதல் வேண்டும்.

அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் விண்ணப்பதாரர்கள் நற்சான்றிதழ் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படமாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்புச் சான்றிதழ் அல்லது (பிறப்புப் பதியப் படாத பரீட்சார்த்தியின் விடயத்தில்) பதிவாளர் அதிபதியினால் வழங்கப்படும் வயதுச் சான்றிதழ் உத்தேச வயதுச் சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பிக்க மட்டுமே முடிந்த எப்பரீட்சார்த்தியினது பிறந்த திகதி அச்சான்றிதழிற் குறிப்பிடப்பட்டுள்ள பிறந்த ஆண்டின் ஜூலை 1 ந் திகதியாகக் கருதப்படும்.

**குறிப்பு.**—(i) பாடசாலை அல்லது கல்வி நோக்கங்களுக்கு வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து பெறப்பட்ட பிரித்தெடுத்த குறிப்பு ஏற்றுக்கொள்ளப் படமாட்டா,

(ii) சத்தியக் கடுதாசிகளோ ஞானஸ்நானச் சான்றிதழ்களோ பிறப்புச் சான்றிதழ்களுக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா,

(iii) பிறப்புச் சான்றிதழிற் காணப்படும் பெயர்/பெயர்கள் விண்ணப்பதாரர் சாதாரணமாக உபயோகிப்பதும் விண்ணப்பிப்பதற்குக் கொடுத்துள்ளதுமான பெயர்/பெயர்களிலிருந்து வேறுபட்டால் பிறப்புப் பதிவில் உள்ள பெயரை திருத்துவதற்கு, விடயத்திற்கேற்றவாறு, (110 ம் அத்தியாயம்) பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டத்தின் 27 ம் அல்லது 28 ம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் உடனே நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிப்பவரும் 1957 ம் ஆண்டு ஆகஸ்ட் 18 ம் திகதிய 394 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகட்கிணங்கத் தமது பெயர்களை மாற்றியுள்ளவர்களுமான விண்ணப்பதாரர்கள் பதிவேட்டிலுள்ள தம் பெயர்களை இப் பரீட்சை காரணமாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டப்பட மாட்டார்கள்.

(இ) இலங்கைப்பிரசையெனப் பதிவு செய்யப்பட்டதற்குரிய பதிவுச் சான்றிதழ் அல்லது பரம்பரைப் பிரசையெனும் கோரிக்கையை ஏற்றுக்கொண்டதற்கான உத்தியோக பூர்வமான மூலக் கடிதம் (ஏற்புடையவிடத்து)

(ஈ) கல்வித் தகைமை பற்றிய மூலச் சான்றிதழ், அல்லது சான்றிதழ் வழங்கப்படாதவிடத்துப் பிற உத்தியோக பூர்வமான சாதனங்கள் எடுத்துக் காட்டாயத் தனிப்பட்ட பரீட்சார்த்திக்கு வழங்கப்பட்ட இலங்கை க. பொ. த. (சாதாரண) பரீட்சை பெறு பேற்று அட்டவணை அல்லது விண்ணப்பதாரரின் பாடசாலை அதிபரிடமிருந்து பெற்ற மூலக் கடிதம்.

(உ) நிரந்தரமாக வசித்திருத்தலை சான்று பகர்வதற்கான சாதனச் சான்றுகள்.

ஒரு மாவட்டத்தில் தொடர்பாக வசிப்பிடத்தைக் கொண்டவர் என்பதற்கு அவ்விடத்திற்குரிய கிராம சேவகரால் கொடுக்கப்பட்ட வசிப்பிடச் சான்றிதழ் அல்லது வேறு சாதனச்சான்று, மாவட்டத்தில் பிறந்தவர் என்பதை நிரூபிப்பதற்குப் பிறப்புச் சான்றிதழ்; மாவட்டத்தில் தொடர்ச்சியாக 5 வருடங்களுக்குக் குறையாத கால எல்லைக்குள் கல்வி கற்றமையை நிரூபிப்பதற்குப் பாடசாலைச் சான்றிதழ், பெற்றோர்கள் காலத்துக்குக் காலம் மாற்றப்படுதற்குரிய சேவையில் உள்ளனர் என்பதை நிரூபிப்பதற்கு வேறு ஏதேனும் சான்றுடன் பெற்றோர் பணிபுரியும் திணைக்கள அதிபரின் சான்றிதழ், விண்ணப்பதாரரின் நிரந்தர வசிப்பிடமாகக் கோரப்பட்டவிடத்து அவரின் தாயார் அல்லது தந்தையார் அந்த மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என்பதை நிரூபிக்கச் சம்பந்தப்பட்ட பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ். பிறப்புச் சான்றிதழ் இல்லாதவிடத்து வேறு திருப்திகரமான தகைமைச் சாதனங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. **தெரிவு செய்யும் முறை.**—(i) கூட்டுறவுப் பரிசோதகர் சேவைப் பதவிக்குரிய வெற்றிடங்கள் வெவ்வேறு பரிபாலன மாவட்டங்கட்கும் அவ்வவற்றின் சனத்தொகை அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளதை விகிதத்தின் படி நிரப்பப்படும். ஒரு மாவட்டத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களிலிருந்தே அம்மாவட்டத்திற்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்படும். நிரந்தர வசிப்பிடத்திற்குரிய தகைமைகள் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களிற் கொடுக்கப்பட்டுள்ளன.

(ii) தகுதிப் பரீட்சையில் அபேட்சகர் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையிலேயே தேர்வுமுறை தங்கியிருக்கும். தகுதிகாண் பரீட்சை என்பது உபபிரிவு 5 (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையாகும். தகைமையுள்ள அபேட்சகர்களினால் தகுதிப் பரீட்சையில் பெறப்பட்ட பெறுபேறுகளை ஒப்பு நோக்குவதன் மூலம் தெரிவு செய்தல் நடத்தப்படும். அத்தகைய பரீட்சையில் ஒரு அபேட்சகர் சித்தி அடைந்துள்ள ஒவ்வோர் பாடத்திற்கும் சித்தியடைந்துள்ள தரத்தின் அடிப்படையில் புள்ளிகள் வழங்குவதன் மூலம் மதிப்பீடு செய்யப்படும்.

புள்ளிகள் பின்வருமாறு வழங்கப்படுதல் வேண்டும் :—

| | புள்ளிகள் |
|---|---|
| ஒவ்வொரு விசேட சித்திக்கும் ... | 75 |
| ஒவ்வொரு திறமைச் சித்திக்கும் ... | 50 |
| ஒவ்வொரு சாதாரண சித்திக்கும் ... | 40 |

தகுதிப் பரீட்சையில் 6 பாடங்களுக்கு மாத்திரமே புள்ளிகள் கொடுக்கப்படும். விண்ணப்பதாரர் கொண்டிருக்கும் எந்த ஓர் உயர் தகைமைக்கும் பின்வரும் அடிப்படையிற் புள்ளிகள் வழங்கப்படும்.

| | புள்ளிகள் |
|---|---|
| க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் குறைந்தது 4 பாடங்கள் சித்தி ... | 30 |
| (4 பாடங்கட்குக் குறைந்த எவற்றிற்கும் புள்ளிகள் வழங்கப்பட மாட்டா) | |
| பட்டத்தினையுடையவருக்கு ... | 70 |

**விண்ணப்பதாரர்களுக்கு.**—க. பொ. த. (உயர்தரம்), பட்டப் படிப்பு இரண்டிற்குமாக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. இவ்விரண்டில் ஒரு தகைமைக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.

(iii) இத்தெரிவு செய்யும் முறையில் கூடுதலான மொத்தப் புள்ளிகளைப் பெற்ற குறிப்பிட்ட அளவு விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(iv) நேர்முகப் பரீட்சையில் அபேட்சகர்களிடம் உள்ள தலைமைத்திறன், கிராம பொருளாதாரம் பற்றிய அறிவு, பொதுப் பொருளாதார, கமத்தொழில், பிரச்சினைகள் பற்றிய அறிவு ஆகியவை மதிப்பீடு செய்யப்படும். நேர்முகப் பரீட்சையில் வழங்கப்படும் ஆகக் கூடிய புள்ளி எண் 75 ஆகும்.

8. **அடையாள அட்டைகள்.**—நேர்முகப் பரீட்சையின் போது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரைத் திருப்திப்படுத்தும் வகையிற் தங்கள் அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இந்நோக்கத்திற்காகப் பின்வரும் சாதனங்களில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) அஞ்சல் தலைமை அதிபதியால் வழங்கப்பட்ட அடையாள அட்டை.

(ஆ) இப்பரீட்சைத் தேதிக்கு 3 ஆண்டுகட்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியான கடவுச் சீட்டு.

(இ) ஒரு அரசாங்க திணைக்களத்தின் பொதுக் கூட்டுத்தாபனத்தின் அல்லது மற்றும் நியதிச்சட்டமுறையான அமைப்பின் அதிகாரத்தின் பேரில் மூன்று ஆண்டுக்கு மேற்படாத காலத்துக்குள் வழங்கப்பட்டதும், அதனை வைத்திருப்பவரின் நிழல் படத்தைக் கொண்டதுமான ஒரு சான்றிதழ் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிறவாதனம்,

(ஈ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை.

(உ) கீழ் தரப்பட்டிருக்கும் அத்தாட்சியைப் பின் பக்கத்திற் கொண்டிருக்கும் கடவுச் சீட்டின் அளவுள்ள புகைப்படம், அவ் அத்தாட்சி அவ்வாறு அத்தாட்சிப்படுத்தக் கூடிய ஒருவரால் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

பின்புறத்திலுள்ள புகைப்படம்..............................

(விண்ணப்பதாரரின் முழு பெயர்)

..............................என்பவருடையது என்பதையும் அன்று

ரின் கையொப்பம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதென்பதையும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

....................................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

....................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

....................................
பெயரும் பதவியும்.

9. இந்த அறிவித்தலிற் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களோடு, மேலாக விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் மிகவும் கவனமாக வாசிக்கும்படி விண்ணப்பதாரர்கள் வேண்டப்படுகின்றனர்.

10. இப் பிரமாணங்களிலோ அல்லது விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களிலோ கொடுக்கப்படாத எவ் விடயங்களும் எனது தற்றுணிபின்படி முடிவு செய்யப்படும்.

ஆர். பி. ராஜகுரு,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்.

த. பெ. இல.419,
கொழும்பு-1, 1973.6.1.

6-544—14.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 64

---

# பரீட்சையும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைக் கல்விச் சேவைக்கு ஆட்சேர்த்தற்கான போட்டிப் பரீட்சை

இலங்கைக் கல்விச் சேவையின் V ஆம் வகுப்பின் பொதுப் பதவியணிக்கும் விசேட பதவியணிக்கும் ஆட்கள் சேர்த்தற்பொருட்டு 1973 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அல்லது அக்கால அளவில் கொழும்பில் நடாத்தப்படவிருக்கும், போட்டிப் பரீட்சைக்கான பின்வரும் பிரமாணங்கள், பரீட்சைத் திட்டம், பாடப் பொழிப்பு ஆகியவை பொது அறிவித்தலின் பொருட்டு பிரசுரிக்கப்படுகின்றன.

பி. உடகம,
கல்வி அமைச்சின் செயலாளர்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு-2,
1973 ஆம் ஆண்டு யூன்

### பிரமாணங்கள்

1. இலங்கைக் கல்விச் சேவையின் V ஆம் வகுப்பின் பொதுப் பதவியணிக்கும் விசேட பதவியணிக்கும் ஆட்கள் சேர்த்தற் பொருட்டு கொழும்பில் 1973 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அல்லது அக்கால அளவில், போட்டிப் பரீட்சை ஒன்று கல்வி அமைச்சின் சார்பில் பரீட்சை ஆணையாளரால் நடத்தப்படும். சரியான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும். பொதுநலன் கருதி இப் பரீட்சையை, சமயத்துக்கேற்றதெனக் கருதுமிடத்து நிராகரிக்கும் உரிமை கல்வி அமைச்சுக்குண்டு. சமயத்துக்கேற்றதென அல்லது அவசியமெனக் கருதுமிடத்து இப்பரீட்சையைப் பிற்போடும் உரிமையும் கல்வி அமைச்சுக்குண்டு.

2. இப்பரீட்சைப் பெறுபேறுகளிலிருந்து நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும் அத்தகைய வெற்றிடங்களை நிரப்பும் திகதியும் கல்வி அமைச்சினுல் காலக்கிரமத்தில் தீர்மானிக்கப்படும். பொதுநலன் கருதி அங்ஙனம் செய்தல் அவசியமெனக் கருதுமிடத்து வெற்றிடங்கள் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் நிரப்புதலைக் கைவிடும் உரிமை கல்வி அமைச்சுக்குண்டு.

3. (i) மேலுள்ள 2 ம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய இப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், அரச பணியிலான நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் (1971 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12 ஆந் திகதிய 14,979/8 ஆம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட) 1971 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7 ஆந் திகதிய இலங்கைக் கல்விச் சேவை விளக்கப் பிரமாணத்தில் விதிக்கப்பட்டுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும், அவ்விளக்கப் பிரமாணத்துக்கு ஏலவே செய்யப்பட்டுள்ள அல்லது இனிமேல் செய்யப்படக்கூடியனவையான திருத்தங்களுக்குமேற்ப அமையவும் இலங்கைக் கல்விச் சேவையின் V ஆம் வகுப்புக்கு நியமிக்கப்படுவார்கள்.

(ii) கல்விச் சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு நேரடியாக முன்னடுத்து அரச பணியில் உபகாரச் சம்பள உரித்துடைய நியமனங்களை ஏலவே வகித்திருந்தாலன்றி இப்பரீட்சைப் பெறுபேறுகளிலிருந்து தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் கல்விச் சேவைக்கு சேம இலாப நிதி அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். உபகாரச் சம்பள உரித்துடைய நியமனங்களை வகித்திருப்பின் கல்விச் சேவையிலான அவர்களின் நியமனங்கள் உபகாரச் சம்பள அடிப்படையில் அமையும்.

(iii) இப்பரீட்சைப் பெறுபேறுகளிலிருந்து கல்விச் சேவைக்கு நியமிக்கப்படும் அபேட்சகர்களுக்கு, அவர்கள் கல்விச் சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு நேரடியாக முன்னடுத்து அத்தகைய உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தியிராவிடின் விதவைகள், அனாதைகள் உபகாரச் சம்பளத் திட்டம் அமையாது.

(iv) V ஆம் வகுப்பின் பொதுப் பதவியணியிலான வெற்றிடங்கள் II ஆந் தர அதிபர் பதவிகளுக்கும் வட்டாரக் கல்வி உத்தியோகத்தர் (பொது) பதவிகளுக்குமுரியனவாகும்.

(v) V ஆம் வகுப்பின் விசேட பதவியணியிலான வெற்றிடங்கள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திலுள்ள II ஆந் தர பதிப்பாசிரியர், பரீட்சைத் திணைக்களத்திலுள்ள உதவிக் கண்காணிப்பாளர்கள் விவசாயம், ஆங்கிலம், விஞ்ஞானம், கைப்பணிகள், வாணிகவியல், மனையியல் ஆகிய பாடங்களிலான (விசேட) வட்டாரக் கல்வி உத்தியோகத்தர்கள் ஆகிய பதவிகளுக்குரியனவாகும்.

4. விண்ணப்பிக்கும் முறை

(அ) அச்சிட்ட விண்ணப்பப் படிவங்கள் எதுவும் பரீட்சை ஆணையாளராலேனும் கல்வி அமைச்சினாலேனும் விநியோகிக்கப்படமாட்டா. இவ்வறிவித்தலின் முடிவில் கொடுபட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கமைய அபேட்சகர்கள் தமது சொந்த விண்ணப்பப் படிவங்களை (ஏறக்குறைய 8½" 12" அளவு) ஒரு தனி முழுத்தாளில் இரு பக்கங்களையும் உபயோகித்துத் தயாரிக்க வேண்டும். எவ்வித சாதனங்களும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படலாகாது.

(ஆ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 1973 ஆம் ஆண்டு யூலாய் மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியனவாக பரீட்சை ஆணையாளருக்கு (விலாசம்: பரீட்சைத் திணைக்களம், மலாய் வீதி, கொழும்பு 2) பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். குறித்த திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரச பணியிலுள்ள ஆசிரியர்களும் உத்தியோகத்தர்களும் தமது விண்ணப்பங்களை அவை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான கடைசித் திகதிக்கு முன் பரீட்சை ஆணையாளருக்குக் கிடைக்கக் கூடியனவாக தத்தம் திணைக்களத் தலைவர்/பிரதேசக் கல்விப் பணிப்பாளர்/பிரதம கல்வி உத்தியோகத்தர் மூலம் அனுப்ப வேண்டும். திணைக்களத் தலைவர்/பிரதேசக் கல்விப் பணிப்பாளர்/பிரதம கல்வி உத்தியோகத்தர் அத்தகைய சகல விண்ணப்பங்களும் எல்லா வகைகளிலும் பூரணமானவையென அத்தாட்சிப்படுத்தி படிவத்தில் காணப்படும் தகுதிச் சான்றுக்கு கையொப்பமிட்டு அதனை உறுதிப்படுத்த வேண்டும். விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளரின் அல்லது பரீட்சைத் திணைக்களத்திலுள்ள எவ்வுத்தியோகத்தரின் சொந்தப் பெயருக்கும் விலாசமிடப்பட்டு அனுப்பப்படலாகா. விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கைக் கல்விச் சேவைக்கு ஆட்சேர்த்தற்கான போட்டிப் பரீட்சை" எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் சகல வகைகளிலும் பூரணமாயிருக்க வேண்டும். கேட்கப்பட்டிருக்கும் சகல விபரங்களையும் கொண்டிராத எவ்விண்ணப்பமும் அதன் சிறப்புகளுக்கேற்ப மதிப்பிடப்பட்டு நிராகரிக்கப்படக்கூடும்.

(ஈ) ஒரு விண்ணப்பப் படிவமேனும் அத்தகைய படிவம் தொடர்பான கடிதமேனும் அஞ்சலில் காணமற் போய்விட்டது அல்லது தாமதிக்கப்பட்டு விட்டது என்ற குற்றச்சாட்டு எதுவும் சீர்தூக்கப்படமாட்டாது. கடைசி நாள்வரை தமது விண்ணப்பங்களைத் தாமதிக்கும் அபேட்சகர்கள் தாமாகவே தமக்கு இடரைத் தேடிக் கொள்வார்கள். விண்ணப்பப் படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

5. பரீட்சைக் கட்டணம்

இப்பரீட்சைக்கான கட்டணம் ரூ. 40/- ஆகும். எனினும், அரச பணியில் நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவிகளை ஏலவே வகிக்கும் உத்தியோகத்தர்களைப் பொறுத்தளவில் குறித்த கட்டணம் ரூ. 20/- ஆகும்.

விண்ணப்பப் படிவத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் உரிய பெறுமதி வாய்ந்த முத்திரைகள் ஒட்டப்பட்டு அபேட்சகரின் ஒப்பமும் திகதியும் இடப்பட்டு அவை அழிக்கப்பட வேண்டும்.

**குறிப்பு**—எத்தகைய சந்தர்ப்பத்திலும் பரீட்சைக் கட்டணத்தின் மீளளிப்பு செய்யப்படமாட்டாது.

### 6. பரீட்சைப் பிரவேசம்

(i) விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட அபேட்சகர்கள் யாவருக்கும் பரீட்சை ஆணையாளர் பிரவேச அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்கு அமரும் அபேட்சகர்கள் தமது பிரவேச அட்டைகளைப் பரீட்சை நிலையக் கண்காணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். குறித்த அட்டைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர் ஒருவர் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) அபேட்சகர்கள், தமக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே இப்பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். அவருக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட நிலையம் தவிர்ந்த வேறெதிலேனும் இப்பரீட்சைக்குத் தோற்றுதற்கு எவ்வபேட்சகரும் அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வோர் அபேட்சகரும் தனது பிரவேச அட்டையைப் பரீட்சைத் தினத்தன்று கண்காணிப்பாளரிடம் கொடுக்க வேண்டும். சகல அபேட்சகர்களும் அவதானிக்க வேண்டிய ஒரு தொகுதி விதிகள் இவ்வறிவித்தலின் முடிவில் கொடுபட்டுள்ளன. அபேட்சகர்கள் அவற்றிற்கு அமைய வேண்டும்.

(iii) பரீட்சைத் தினத்துக்குக் குறைந்த பட்சம் 7 நாட்களுக்கு முன் தனது பிரவேச அட்டையை அபேட்சகர் ஒருவர் பெறுவிடின் அது பற்றி பரீட்சை ஆணையாளருக்கு (அஞ்சல் முகவரி : த. பெ. 1503, கொழும்பு தந்தி முகவரி : "பரீட்சை" கொழும்பு) உடனே அறிவிக்க வேண்டும். பிரவேச அட்டையைப் பெறுதமை பற்றி அறிவிக்கும்போது பின்வரும் விபரங்கள் கொடுபட வேண்டும் :—

(அ) பரீட்சையின் பெயர்.
(ஆ) பரீட்சார்த்தியின் முழுப்பெயர்.
(இ) முகவரி.
(ஈ) விண்ணப்பம் அனுப்பிய திகதி, பதிவஞ்சல் கடிதத்தின் இலக்கமும் பதிவு செய்த அஞ்சல் அலுவலகமும்.

(iv) பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்டிருத்தலால் தகுதித்திறன் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதெனக் கருதிக் கொள்ளலாகாது. எனினும், பரீட்சை ஆணையாளர் தற்றுணிபுக்கேற்ப அபேட்சகர் ஒருவரைத் தற்காலிகமாகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கலாம். அத்தகைய அனுமதி பின்னர் உறுதிப்படுத்தப்படவேனும் நிராகரிக்கப்படவேனும் கூடும்.

### 7. தகவுத்திறன்

**V ஆம் வகுப்பு—பொதுப் பதவியணி**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :—

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (ஏலவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கும் வித்தியாதிபதி முகாமைப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களுக்கும் இவ்வயதெல்லை அமையாது).

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியளவில்—

(அ) பயிற்றப்பட்ட பின் குறைந்தபட்சம் 2 வருட கற்பித்தல் அனுபவம் பெற்ற பயிற்றப்பட்ட பட்டதாரியாக இருக்க வேண்டும்; அல்லது

(ஆ) பட்டம் பெற்றபின் குறைந்தபட்சம் 5 வருட அனுபவம் உட்பட குறைந்தபட்சம் 7 வருட கற்பித்தல் அனுபவம் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகப் பட்டதாரியாக இருக்க வேண்டும்; அல்லது

(இ) பயிற்றப்பட்ட ஆசிரியராகக் குறைந்தபட்சம் 10 வருடம் சேவை புரிந்த 1 ஆம் வகுப்புப் பயிற்றப்பட்ட ஆசிரியராக இருக்க வேண்டும்; அல்லது

(ஈ) ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றபின் குறைந்தபட்சம் 15 வருட சேவை புரிந்த 1 ஆம் வகுப்பு ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியராக இருக்க வேண்டும்.

**V ஆம் வகுப்பு—விசேட பதவியணி**

சகல வெற்றிடங்களும், செயலாளரால் கல்வி அமைச்சின் பாடத் தேவைகளுக்கேற்பக் கண்டிப்பாகத் தீர்மானிக்கப்படுதற்கமைய நிரப்பப்படும்.

விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :—

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 25 வயதிற்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கும் வித்தியாதிபதி முகாமைப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களுக்கும் இவ்வயதெல்லை அமையாது)

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியளவில் ஆகக் குறைந்தது 3 வருட கற்பித்தல் அல்லது தொடர்புறு அனுபவம் அல்லது வேண்டிய பாடத்துறையில் ஆகக் குறைந்தது 3 வருட செயல்முறை அனுபவம் பெற்றுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகப் பட்டதாரியாக இருக்க வேண்டும்.

குறிப்பு—அரச பணியிலுள்ள எவ்வாசிரியரேனும் உத்தியோகத்தரேனும் 1.9.73 க்கு நேரடியாக முன்னுள்ள 5 வருட காலம் அல்லது 1.9.73 க்கு நேரடியாக முன்னுள்ள சேவை 5 வருடங்களுக்குக் குறைவாக இருப்பின் குறைந்த காலம் திருப்திகரமான சேவை புரிந்திருந்தாலன்றி இப்பரீட்சைக்குத் தோற்றுதற்கு உரித்துடையராகார். குறித்த சேவைக் காலத்தில் உரிய சகல வேதன உயர்ச்சிகளையும் உழைத்திருப்பதுடன் ஒழுக்க நடவடிக்கை சம்பந்தமான எத்தகைய தண்டனைகளுக்கும் (எச்சரிக்கைகள் நீங்கலாக) ஆளாகியிராவிடில் மாத்திரமே உத்தியோகத்தர் ஒருவர் திருப்திகரமான சேவை புரிந்திருப்பதாகக் கருதப்படும்.

1.9.73 க்கு நேரடியாக முன்னுள்ள 5 வருட கால சேவைக்கு முன்னுள்ள சேவை பூரணமாகத் திருப்திகரமாக இல்லாவிடினும் அத்தகைய உத்தியோகத்தர் ஒருவர் இப்பரீட்சைக்குத் தோற்றுதற்கு உரித்துடையராவார். எனினும் ஒழுக்க நடவடிக்கை சம்பந்தமாக அவர் ஆளாகியுள்ள யாதேனும் தண்டனை அல்லது பெற்றுள்ள யாதேனும் மாறான புறக்குறிப்புகள், கண்டனங்கள் அல்லது எச்சரிக்கைகள் ஆகியவை நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் அளிக்கும்போது கவனத்துக்கு எடுக்கப்படும்.

### 8. அடையாள அட்டைகள்

அபேட்சகர்கள், தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடத்தின்போதும் கண்காணிப்பாளர் திருப்தி அடையக் கூடிய முறையில் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இந்நோக்கத்தின் பொருட்டு பின்வரும் சாதனங்களுள் எவையேனும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) தலைமைத் தபால் அதிபரால் வழங்கப்படும் அடையாளச் சீட்டு.

(ஆ) பரீட்சைத் திகதிக்கு 3 வருடங்களுக்கு மேற்படாத காலத்துக்குள் வழங்கப்பட்ட செல்லுபடியான துறைமுகஞ்செல் அனுமதிப் பத்திரம்.

(இ) பரீட்சைத் திகதிக்கு 3 வருடங்களுக்கு மேற்படாத காலத்துக்குள் ஓர் அரசாங்க திணைக்களத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் அல்லது சட்ட முறையான ஒரு நிறுவனத்தின் அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்டதும் அதனைக் கொண்டுள்ளவரின் நிழற்படத்தைக் கொண்டதுமான யாதேனும் சான்றிதழ், "லைசென்ஸ்" அல்லது வேறு யாதேனும் சாதனம்.

(ஈ) துறைமுகஞ்செல் அனுமதிப் பத்திர அளவிலான நிழற்படம் (அபேட்சகரின் ஒப்பம் நிழற்படத்தின் மறுபக்கத்தில் இடப்பட்டு, நிழற்படமும் ஒப்பமும் அபேட்சகரினவாகுமென திணைக்களத் தலைவரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர், பதவிப்பெயர், திகதி, விலாசம் ஆகியவை அங்கு கொடுபட வேண்டும். இந்நிழற்படம் கண்காணிப்பாளரால் வைத்திருக்கப்படும்).

(உ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தால் வழங்கப்படும் ஓர் அடையாளச் சீட்டு.

### 9. உண்மையற்ற தகவலைக் கொடுத்தற்கான தண்டம்

இப்பரீட்சைப் பிரமாணங்களின் பிரகாரம் ஓர் அபேட்சகர் தகவற்றவரென இப்பரீட்சை ஆரம்பித்தற்கு முன் எப்பருவத்திலேனும் பரீட்சை நடைபெறும் நேரத்திலேனும் பரீட்சையின் பின்னரேனும் காணப்படின் அவரது அபேட்சகர் தகைமை நிராகரிக்கப்படும்.

ஓர் அபேட்சகர் கொடுத்துள்ள விபரங்கள் அவரது அறிவுக்குட்பட உண்மையற்றவையெனக் காணப்படின் அல்லது முக்கியமான விபரம் எதையேனும் அவர் வேண்டுமென்று மறைத்து வைத்திருப்பின் அரச பணியிலிருந்து விலக்கப்படுதற்கு அவர் பாத்திரராவார்.

### 10. பரீட்சைத் திட்டமும் பாடப் பொழிப்பும்

அபேட்சகர்கள் பின்வரும் பாடங்களுக்குத் தோற்ற வேண்டும் :—

1. பொது வினாத்தாள் (3 மணித்தியாலம்)—150 புள்ளிகள்
2. கிரகித்தல் (1½ மணித்தியாலம்)—100 புள்ளிகள்
3. கட்டுரை எழுதல் (3 மணித்தியாலம்)—150 புள்ளிகள்

கல்வி அமைச்சால் தீர்மானிக்கப்படும் ஓர் ஆகக்குறைந்த தொகைப் புள்ளிகளை மேற்குறித்த பரீட்சையில் பெறும் அபேட்சகர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவார்கள். இந்நேர்முகப் பரீட்சைக்கு 100 புள்ளிகள் கொடுபடும்.

*(1) பொது வினாத்தாள்*

அபேட்சகர் வகிந்து, கடமை புரியும் சூழல் பற்றிய அறிவைச் சோதிக்கும் முறையில் இவ்வினாத்தாள் அமையும். சூழல் பற்றிய அறிவு என்பது இலங்கையில் நிலவும் கல்வி, சமூக, கலாச்சார, அரசியல், பொருளியல் நிலைமையையும் அனைத்துலக கல்வி, விஞ்ஞான, தொழில்நுட்பவியல் சூழலையும் கருதுவதாகும். விடை அளித்தற்கான வினாக்களைத் தெரிவு செய்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

*(2) கிரகித்தல்*

வாக்கியத் தொகுதிகள் சில கொடுக்கப்பட்டு அவற்றின் கருத்தைக் கிரகித்தல் அபேட்சகரின் ஆற்றலைச் சோதிக்கும் முறையில் வினாக்கள் அமையும்.

*(3) கட்டுரை எழுதுதல்*

கொடுபடும் ஒரு தொகுதி விடயங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் மூன்று விடயங்கள் பற்றி கட்டுரைகள் எழுதுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படுவார்கள். இவ்விடயங்கள் யாதேனும் குறித்த கற்கைத் துறையுடன் சம்பந்தப்படாது அபேட்சகரின் பொது அறிவையும் விவேகத்தையும் சிந்திக்கும் ஆற்றலையும் கருத்துக்களை வெளியிடும் ஆற்றலையும் சோதிக்கும் வகையினவாக இருக்கும். விடயங்களைக் கையாளுதலில் காணப்படும் ஆக்க வல்லபம், சிந்தனைதிறன், ஒப்பனை ஆகியவற்றின் அடிப்படையிலேயே கட்டுரைகள் மதிப்பிடப்படும். கட்டுரைகள் வாசிக்கக்கூடியனவாகவும் தெளிவாகவும் எழுதப்பட வேண்டும்.

மேற்குறித்த மூன்று வினாப்பத்திரங்களுக்குமென விசேட புத்தகங்கள் ஒன்றும் விதிக்கப்பட்டில்லை. எனினும், அபேட்சகர்கள் விரிவாக வாசித்திருப்பரெனவும் தற்கால நிகழ்ச்சிகள் பற்றி நன்கு அறிந்திருப்பரெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் கல்வி அமைச்சும் அதன் கீழுள்ள பல்வேறு திணைக்களங்களும் நிலையங்களும் இயங்கும் முறை, நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் கல்விச் சீர்திருத்தங்கள், தொழிற் கற்கைகளின் முக்கியத்துவமும் அடக்கமும் பற்றிய அறிவு உதவியாக இருக்கும்.

தமது வேலைத் துறையில் புரிந்துள்ள சிறப்பான வேலைக்கும், பொருத்தமான இடங்களில் கஷ்டமான பகுதிகளில் புரிந்துள்ள சேவைக்கும் விசேட அம்சம் நேர்முகப் பரீட்சையின்போது கொடுபடும். எழுத்துமூலப் பரீட்சையில் அபேட்சகர்கள் பெறும் புள்ளிகள் நேர்முகப் பரீட்சைச் சபையினருக்கு அறிவிக்கப்படமாட்டா.

11. பரீட்சை மொழிமூலம்

(அ) எழுத்துமூலப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடைபெறும். அரசாங்க சேவையில் சேர்தற்கான தகைமைப் பரீட்சை/நேர்முகப் பரீட்சையில் எம்மொழிமூலம் சித்தி அடைந்தனரோ அம்மொழி மூலமே விடைகள் எழுத வேண்டும். எனினும், அவர்கள் வேறு மொழிமூலம் குறித்த தகைமைப் பரீட்சையில்/நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின், விரும்பின் அரசகரும மொழி அதாவது சிங்களம்—மூலம் விடைகளை எழுதலாம்.

(ஆ) அபேட்சகர்கள் வினாத்தாள்கள் எல்லாவற்றிற்கும் ஒரே மொழிமூலமே விடை எழுத வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிக்குப் பின் குறித்த மொழிமூலத்தை மாற்றிக் கொள்ள அபேட்சகர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

12. இப்பிரமாணங்களால் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயமும் கல்வி அமைச்சின் செயலாளரின் தற்றுணிபுக்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

மாதிரிப் படிவம்

(8½" × 12" அளவு ஒரு தனி முழுத்தாளில் இரு பக்கங்களையும் உபயோகித்து அபேட்சகர்கள் தமது விண்ணப்பப் படிவத்தை இதற்கமையத் தயாரிக்க வேண்டும்)

**இலங்கைக் கல்விச் சேவைக்கு ஆட்சேர்த்தற்கான போட்டிப் பரீட்சை—1973 ஆம் ஆண்டு**

| சுட்டிலக்கம் :———— (அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம்) |
|---|

1. (i) முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர் :————.
(ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :————.

2. முழு முகவரி :————.
(அரசாங்க/உள்ளூராட்சி/அரசாங்க கூட்டுத்தாபன/சபையின் சேவையிலுள்ளவர்கள் தமது உத்தியோக முகவரியைக் கொடுக்க வேண்டும். முகவரியில் ஏற்படும் மாற்றம் எதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்).

3. வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா நீங்கள் இலங்கைப் பிரசையெனக் குறிப்பிடவும் :————.

4. (i) பிறந்த திகதி :————.
(ii) 31.7.1973 அன்றுள்ளபடி வயது : வரு. ————. மா. ————. நா. ————.

5. (i) அரசாங்க/உள்ளூராட்சி/அரசாங்க கூட்டுத்தாபன/சபையின் சேவையில் வகிக்கும் தற்போதைய பதவி :————.
(ii) இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :————.

6. பால் :————.

7. விவாகம் செய்தவரா ? தனியாளரா ? :————.

8. கல்விச் சேவையின் V ஆம் வகுப்பின் **பொதுப் பதவியணியிலா அல்லது விசேட பதவியணியிலா** சேர விண்ணப்பிக்கின்றீர் ? :————.

9. (i) வர்த்தமானி அறிவித்தலின் 7 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய நீங்கள் இப் பரீட்சைக்கு எத்தகைமை அடிப்படையில் விண்ணப்பித்தற்கு உரித்துடையவர் ? :————.
(ii) (அ) மேலுள்ள (i) ஆம் உப-பந்தியில் குறிப்பிட்டுள்ள தகைமையுடன் நியமனம் பெற்ற திகதி :————
(ஆ) (i) பட்டதாரியாயின்
(1) பட்டப் பரீட்சை வருடம் :————.
(2) பல்கலைக் கழகம் :————.
(3) பாடங்கள் :————.
(4) வகுப்பு :————.
(ii) பயிற்றப்பட்ட ஆசிரியராயின்—
(1) பயிற்றப்பட்ட ஆசிரியர் கலாசாலை : ————.
(2) தராதரப் பத்திர இலக்கமும் திகதியும் : ————.
(3) தராதரப் பத்திரம் செல்லுபடியாகும் திகதி :————.
(4) 1 ஆம் வகுப்புக்கு அது உயர்த்தப்பட்ட திகதி :————.
(iii) ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியராயின்—
(1) தராதரப் பத்திரத்தின் இலக்கமும் திகதியும் :————.
(2) தராதரப் பத்திரம் செல்லுபடியாகும் திகதி :————.
(3) 1 ஆம் வகுப்புக்கு அது உயர்த்தப்பட்ட திகதி :————.
(iii) பட்டப்பின் தகைமைகள் யாதேனும் பற்றிய விபரங்கள் : ————.
(iv) விசேட பதவியணிக்கு விண்ணப்பிப்பவராயின், கற்பித்தல்/தொடர்புறு/செயல்முறை அனுபவம் பற்றிய முழு விபரங்களை திகதிகளுடனும் வகித்த பதவிகளுடனும் கொடுக்கவும் :————.

10. ........... அன்றுள்ளபடி நிரந்தர, தொடர்ச்சியான சேவைக் காலத்தின் மொத்தம் :———— வருடம். ———— மாதம்.

11. 9 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சேவையில் சேர்தற்கான தகுதி/நேர்முகப் பரீட்சையில் எம்மொழி மூலம் சித்தியடைந்தீர்களெனக் குறிப்பிடுக :————.

12. இப்பரீட்சைக்கு எம்மொழி மூலம் தோற்ற விரும்புகிறீர் ? : ————.

13. முத்திரைகளுக்கான கூடு :

14. (அ) இப்படிவத்தில் கொடுபட்டுள்ள தகவல் நான் அறிந்த வரையிலும் நம்புகிறவரையிலும் உண்மையானதெனவும் செம்மையானதெனவும் ;

(ஆ) ரூ. ........... பெறுமதியான முத்திரைகள் ஒட்டி எனது ஒப்பமும் திகதியும் இட்டு அவற்றை அழித்துள்ளேன் எனவும் இம்முத்திரைகள் இதற்கு முன் உபயோகிக்கப்படாதவை எனவும் ;

(இ) பரீட்சைகள் தொடர்பாக அமையும் விதிகளுக்கும் பரீட்சைப் பிரமாணங்களுக்கமைய நான் தகுதியற்றவரென பரீட்சைக்கு முன்னரேனும் பரீட்சை நேரத்திலேனும் பரீட்சையின் பின்னரேனும் காணப்படின் எனது அபேட்சகர் தகைமையை நிராகரித்தற்கு எடுக்கப்படும் எம்முடிபுக்கும் அமைய ஒழுக இணங்குகிறேன் எனவும் ;

(ஈ) நான் கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவையென அல்லது முக்கியமான விபரம் அல்லது தகவல் எதனையும் வேண்டுமென மறைத்துவிட்டேன் எனக் காணப்படின் அரச பணியிலிருந்து விலக்கப்படுதற்குப் பாத்திரராவேனென அறிவேன் எனவும்

நான் உறுதியுரை அளிக்கின்றேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

15. திணைக்கள/உள்ளூராட்சிச் சபை/கூட்டுத்தாபன/சபைத் தலைவர் அத்தாட்சிப்படுத்தல் :

விண்ணப்பதாரி இப்படிவத்தின் 4 ஆம், 5 ஆம், 9 ஆம் கூடுகளில் கொடுத்துள்ள தகவல் அலுவலகப் பதிவுச் சுவடிகளில் கிடைக்கக் கூடியதாகவுள்ள விபரங்களுடன் சரிபார்க்கப்பட்டு, அவை சரியானவையென இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————,
திணைக்கள/உள்ளூராட்சிச் சபை/கூட்டுத்தாபன/சபைத் தலைவரின் ஒப்பம்.

திணைக்களம்/உள்ளூராட்சிச் சபை/
கூட்டுத்தாபனம்/சபை
ஸ்தானம் :————.
திகதி :————.

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

### பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லா பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தாரதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமென பரீட்சார்த்திகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும் ; எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரச சேவைகள் ஆலோசனைச் சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணுது நடந்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுது அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானல் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்தாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்தாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையே வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்மானவையாகும். இவ் விதிக்கு மாறுக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்திலாயத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கை முறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணுக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடை யெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ் விதிக்கு மாறுக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால், சித்திரத்தில் அலங்காரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்

திலும். பெரும்பாலும் வேறுமொன்றினேடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைபையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக் கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அழகுசெய் செப்பு, பார்சல், முதலியவற்றை கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்க கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினல் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்பட மாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனல், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலிய வற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேருெரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேருெரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறு ஒருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக் கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேருெருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல் பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துகுத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல்வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனல் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாருக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக்கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசை மேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்த பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள் விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

((vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது கட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும் அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்ருேடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடது பக்க அடைப்பில் வினவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவருன இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானல், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிபிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினுப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினுக்கள் தெரிவுக்குரிய வினுக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும் அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினல் உமது விடைத்தாள் காணுமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினல் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு 2.

6-583—14.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 64.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **யூன்** | 1.6.73 | வெள்ளி | 23.5.73 | புதன் | ந. ப. 12.00 |
| | 8.6.73 | வெள்ளி | 30.5.73 | புதன் | ந. ப. 12.00 |
| | 14.6.73 | வியாழன் | 6.6.73 | புதன் | ந. ப. 12.00 |
| | 22.6.73 | வெள்ளி | 13.6.73 | புதன் | ந. ப. 12.00 |
| | 29.6.73 | வெள்ளி | 20.6.73 | புதன் | ந. ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் தி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.